வாரப் பதிப்பு விலை சதம் 25

இலங்கைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்

SUTANTIRAN

194 A. BANDARANAIKE STREET, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.

புத்தகம் 17 | திருவள்ளுவர் ஆண்டு 1994 பங்குனி திங்கள் 16-ம் நாள் (29—3—1964) ஞாயிற்றுக்கிழமை துல்கஃ 14 | இதழ் 44




# 'சர்வாதிகாரம்' வெறும் புரளி

## பத்திரிகைகளின் சரடு

## பட்ஜெட் நிறைவேற சிறிமாவோ உபாயம்

இலங்கையில் சர்வாதிகாரம் என்ற பேச்சுக்கே இட மில்லை என்றும், சர்வாதிகாரம் பற்றி கடந்த வாரம் பரப்பப்பட்ட கதைகள் பத்திரிகை உலகத் தின் புரளி என்றும் தமிழரசுக் கட்சி வட்டாரங் கள் கூறின.

சர்வாதிகாரத்தை நிறுவ எந்த நபராவது முயற்சி செய்தால் அதனை அவர் இரகசியமாகச் செய் வாரேயன்றி, தான் திட்டமிட்ட சதியைக் குறித்து பிரசாரம் செய்துகொண்டு திரியமாட்டார்என்றும் மேற்படி வட்டாரங்கள் சுட்டிக்காட்டின.

'அடுத்த வரவு செலவுத் திட்டம்தான், இன்றுள்ள உண்மையான பிரச்சினை. அரசாங்கக்கட்சியின் எல் லாப் பகுதியினரையும் திருப் திப் படுத்தக் கூடியதாக ஒரு வரவு செலவுத் திட்டத் தைத் தயாரித்தல் கடினம் என்பதை ஆளும் கட்சி உணர்ந்துள்ளதாம்.

ஆதலின் தாங்கள்தயாரிக் கும் வரவு செலவுத் திட் டத்தை அரசாங்கக் கட்சியி லுள்ள மாறுபட்ட கருத்துக் கொண்ட கோஷ்டியினரும் ஏற்றுக்கொள்ளும்படி செய்ய பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா ஒரு திறமையான உபாயத் தைக் கையாண்டு வருவதா கத் தெரிகிறது.

கட்சியிலுள்ளவலதுசாரிக் கோஷ்டியினர் ஐக்கிய தேசி யக் கட்சியுடன்சேரப்போவ தாகக் கட்சியின் இடதுசாரி களிடம் திருமதி பண்டார நாயக்காகூறிவருவதாகவும், கட்சியிலுள்ள இடதுசாரி யினர் இடதுசாரி ஐக்கிய முன்னணியில் சேரப்போவ தாகக் கட்சியின் வலதுசாரி களிடம் அவர் கூறிவருவ தாகவும் அறியப்படுகிறது. அத்துடன் அவர்கள் எல் லோரும் வரவு செலவுத் திட்டத்தை ஏற்றுக்கொள்ளா விட்டால், பாராளுமன்றத்தைக் கலை த்துவிடப் போவதாக அவர் கள் அனைவருக்கும் அவர் கூறி வருகிறாரென்றும் தெரி கிறது.

திருமதி பண்டாரநாயக்க தமது கணவரை விடப் பன் மடங்கு உபாயங்கள் தெரிந் தவரென்றும், திரு. இலங்க ரத்தினாவால் தயாரிக்கப் படுமென கருதப்படும் அடுத்த வரவு-செலவுத் திட் டத்தை ஆளும் கட்சியில் அனைவரும் ஏற்றுக் கொள் ளச் செய்யும் முயற்சியில் அவர் அநேகமாக வெற்றி பெறக் கூடுமென்றும் கூறப் படுகிறது'. இவ்வாறு பிரஸ் தாபத் தமிழரசுக்கட்சி வட் டாரங்கள் கருத்துத் தெரி வித்தன.

# கூட்டு மேதினம் நடத்த ஏற்பாடு

## மொழி வழித் தொழிற் சங்கங்களின் நடவடிக்கை

அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் தலைமையில் இவ்வாண்டின் மேதினத்தை சிறந்த முறையில் மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், திருகோணமலை ஆகிய இடங்களில் நடாத்துவதற்கு மொழி வழித் தொழிற் சங்கங்கள் ஏற்பாடுகள் செய்து வருவ தாகத் தெரிகிறது.

இவ்வாண்டின் மே தினத்தை மொழிவழித் தொழிற் சங்கங்கள் அனைத் தும் அரசாங்க எழுதுவினை ஞர் சங்கத்தின் ஆதரவுடன் பரந்த அடிப்படையில் சிறந்த முறையில் நடாத்து வதற்கு ஒழுங்குகள் மேற் கொண்டு வருகின்றன.

அரசாங்க துறையிலும், தனியார் துறையிலும், கூட் டுறவுகளிலும் உள்ள சகல மொழிவழித் தொழிற் சங் கங்களையும் உள்ளடக்கிய கூட்டு மேதினமாக நடாத் துவதற்கு அரசாங்க எழுது வினைஞர் சங்கம், அஞ்சல் எழுதுவினைஞர் சங்கம், தமிழ் பேசும் அரசாங்க ஊழியர் சங்கம், துறைமுக நாவாய் இயக்குனர் சங்கம், துறைமுக கூட்டுறவு ஊழி

(7-ம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம்களின் போதனமொழி

இலங்கைவாழ் முஸ்லிம் களின் போதனா மொழிதமிழே, என்றுகடந்த வார இறுதியில் சாய்ந்த மருது முஸ்லிம் வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற கிழக்கு இலங்கை முஸ்லிம் கல்வியாநாட்டில் தீர்மானிக் கப்பட்டது.

இம் மாநாட்டுக்கு கிழக்கு இலங்கை முஸ்லிம் ஆசிரிய சங்கத்தலைவர் ஜனாப் ஜே. எம். எம். அப்துல் காதர் தலைமை தாங்கினார். இலங் கையின் பல பாகங்களிலிருந் தும் பல முஸ்லிம் பிரமுகர் கள் இம்மாநாட்டில் பங்கு கொண்டு கருத்துரை வழங் கினர்.

# கட்டாய ஓய்வை எதிர்த்து நடவடிக்கை

## இறுதிவரை போராடுவோம் என அ. எழுதுவினைஞர் சங்கம் தீர்மானம்

அரச சேவையில் தொடர்ந்து இருப்பதற்குச் சிங்களத்தில் தேர்ச்சி பெற வேண்டும் என்ற அரசின் கொள்கையை எதிர்த்தே திருவோம். இதற்காகத் தொழிலிழந்து, தமிழ் நலனுக்காகத தியாகம் செய்யும் சந்தர்ப்பம் கிடைக்குமானுல் எமக்குப் பெரு மையும் பேருவகையும் உண்டாகும். நமது போராட்டக் காலம் நமது தாயகங்களை நோக்கித் திசை திரும்புகிறது. எம் மொழிக் கும் எந்த இனத்துக்கும் இழப்பில்லாத சமுதாயத்தின் வாரிசு களாகிய நாம் ஒரு புனித இலட்சியத்துக்காகப் போராடத் தயங்க மாட்டோம்.

கட்டாய ஓய்வுக்கான கட் டளைகளை, சிங்களம் படிக் காத எழுதுவினைஞர்களுக்கு, திறைசேரி வழங்கி வரு வதையிட்டு அரசாங்க எழுதுவினைஞர் சங்க ஆட் சிக் குழு மேற்கண்ட தீர்மா னத்தை விடுத்துள்ளது. அத் தீர்மானத்தின் முழு அம்சங் களும் இங்கு தரப்பட்டுள் ளன:

அரசாங்க நடவடிக்கை யின் பயனாக இன்று ஏற்பட் டுள்ள கவலைக்கிடமான நிலை மையை ஆராய்ந்த அர சாங்க எழுதுவினைஞர் சங்க ஆட்சிக் குழு, இவ்வுலகத்தில் இலட்சியங்களையும், கருத் துக்களையும் தவிர வேறு எது வுமே நிலைப்பதில்லை என் பதை மீண்டும் வலியுறுத்த விரும்புகிறது.

தொழிலாள வர்க்கத்தின் ஒற்றுமை, இன வேறுபாட் டையும் கடந்து நிற்கும் ஒன்று என்னும் பிரமை யைத் தகர்த்தெறியும் வண் ணம், தொழிற் சங்கங்கள்

(7-ம் பக்கம் பார்க்க)

## தணிக்கை

22-3-64 சுதந்திரன் இத ழில் 1, 8, 15 ஆகிய பக்கங்கள் தெளிவில்லாமல் போன மைக்கு அச்சுக் கோளாறு கார ணமல்ல தகுதிவாய்ந்த செய் தித் தணிக்கையாளர்களினல் செய்திகள் தணிக்கை செய் யப்பட்டன, என்பதை வாசகர் களுக்கு அறியத் தருகிறேம்.

—ஆசிரியர்—

# தமிழ் ஆசிரியர்களின் 11 அம்சக் கோரிக்கை

அகில இலங்கைத் தமி ழாசிரியர் சங்கம் கீழ்க்காணப்படும் 11 அம்சங் களுக்கான ஒருபோராட்டத் தினை நடாத்துவதற்கான ஒழுங்குகளைச் செய்துவருகி றது.

சிறிலங்கா ஜாதிக குரு சங் கம் (சிங்கள ஆசிரிய சங்கம்) 5 கோரிக்கைகளுக்காகப் போராடும் இவ்வேளையில் மொழித்திணிப்பினுல்பாதிக் கப்பட்டு வரும் தமிழ் ஆசிரி யர்கள் வேறுசில வசதிகளுக் காகவும் போராடவேண்டிய நிர்ப்பந்தத்தில் உள்ளனர். இப்போராட்டத்துக்கான ஒத்துழைப்பைத் தமிழ் ஆசி ரியர்களிடமும், ஆசிரியசங் கங்களிடமும் கோரி ஓர் வேண்டுகோளை அகில இலங்கை ஆசிரிய சங்கப் பொதுச் செயலாளர் திரு. ம. சிவநேசராசா விடுத்தி ருக்கிறார்.

(7-ம் பக்கம் பார்க்க)

## ம. மு. தெ. எருவில் கிராம சபை தேர்தல்

மண்முனை தென் எருவில் கிராமசபைத் தேர்தல் இம் முறை ஒரு ருசிகரமான கட் டத்தில் நடைபெறுகிறது. நேர்முகமாகப் போட்டி போடப் பயந்துகொண்டி ருக்கும் கிழக்கிலங்கை அபி



திரு சி. மூ. இராசமாணிக்கம்

விருத்தி முன்னணியினர் மறைமுகமாக அத் தேர்த லில் குதித்துள்ளார்கள். இக் கட்சியினரின் முதற் தேர்த லும்-முடிவுத் தேர்தலும் இதுதான் எனப் பலர் அபிப் பிராயம் கூறுகிறார்கள். இவர் களை எதிர்த்து இலங்கைத் தமிழரசுக்கட்சி ஒன்பது (9) இடங்களில் நேரடியாகவும்- -7 இடங்களில் ஆதரவாளர் களைக்கொண்டும் போட்டி போடுகிறது.

முதலாம் வட்டாரத்துக் குக் கட்சி வேட்பாளரும் முன்னாள் இச்சபையின் உப தலைவருமான திரு. கிருஷ்ண பிள்ளை அவர்கள் போட்டி யின்றித் தெரிவு செய்யப் பட்டுள்ளார்.

கிழக்கிலங்கை அபிவிருத்தி முன்னணியின் தலைவர் தமி ழரசு சின்னமான வீட்டைக் கேட்க முற்பட்டார். பக்கத்

(-7ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டைத் தமிழ்ப் பெண்களின் வீர வரலாறு

## புறத்திலே காணும் அறம்

## இன்றுள்ள எம்மினத்துக்கு எழுச்சியூட்ட உதவாதா?

**ஒரு சமூகமோ, நாடோ அறம் வளர்க்கும் வீர நெறிகளிலே சிறப்புற்றுத் திகழ வேண்டின் ஆங்கே வாழும் தெய்வ மொத்த பெண்களும் அறங் காக்கும் வீரப் பெண்டிராகத் திகழ வேண்டியது அதி அவசியமாகும். பெண் எவ்வழியோ அதன் வழியே அச் சமூகமும், நாடும்!**

இதிகாசங்களும் இலக்கியங்களும் பழம் பெருமைகளையும் பழக்க வழக்கங்களையும் இயம்புவன. அவற்றைப் படிப்பதன் பயனாய் புத்துணர்ச்சியும், தத்தம் கலை, கலாச்சாரம், பண்பாடு முதலியவற்றில் ஆர்வமும், வாழ்வை எவ்வகைத்தேனும் வளமாக்குவதில் புது முயற்சியும் ஏற்படுவது இயல்பு. இதிகாசங்களும், இலக்கியங்களும் அழியாமல் வளருவதற்கு இதுவுமோர் காரணமாகும். இத்தகைய இலக்கியப் பூங்காவிலே பூத்து இன்மணம் பரப்பிநிற்கும் இலக்கிய மலர்களிலே இன்பத் தமிழ் இலக்கியப் புட்பங்கள் அனந்தம்; அனந்தம்! அகமும், புறமும் அழகுபட எடுத்தோதும் அமுதமனைய தமிழ் இலக்கியங்களிலே பெண்மை வீரம் மிளிரக் காணலாம். தமிழ் கூறும் நல்லுலகத்தினர் பெண் வீரத்தினைப் புகழ்ந்து பாடுவதில் பேரின்பம் கண்டவர்கள். ஆதலின், புறப் பொருட்துறைகளிலே வீரப் பெண்டிரைப் புகழ்ந்து பாடுதலை 'மூதின் முல்லை' என அழகு மிளிர அழைத்தனர். அத்தகைய.........

நற்றமிழ் நந்தவனத்திலே புறப் பொருட்துறையை மிகைபட நவின்று நிற்கும் புறநானூற்றிலே வீரர் சுவையே மிகுந்து காணப் படுகிறது. அவற்றை-அவற்ருேடு ஒன்றி-நுகரும்போழ்து இன்றைய ஈழத்துத் தமிழ் பேசும் மகளிருக்கோர் புதுத் தெம்பு பிறக்கும் என்பதில் சந்தேகமே இல்லை.

ஒரு நாள்—

காவற் பெண்டு எனும் பெயருடைய பெண்பாற் புலவரொருவரை நோக்கி ஒருவன் "உங்கள் மகன் எங்கே?" என வினவினுர்.

அதற்கு அந்த வீரத்தாய்—தமிழ்ப் புலமையள் கூறிய விடை அழகான பாடலாக புறநானூற்றிலே இன்றும் மிளிர்வதைக் காணலாம்.

சிற்றில் நற்றூண் பற்றி நின் மகன்
யாண்டுள ஞேவென வினவுதி; என் மகன்
யாண்டுள ஞயினும் அறியேன்; ஓடும்
புலி சேர்ந்து போகிய கல்லளை போல
ஈன்ற வயிருே இதுவே;
தோன்றுவன் மாதோ போர்க்களத் தானே!

'சிறிய வீட்டிலே நல்ல தூணைப் பற்றிக் கொண்டு

**செல்வி நஹீமா பஷீர்**

எனது மகன் எங்குளான் என வினவுகின்றீர்; என் மகன் எங்குள்ளனே, யானே அதனை அறிகிலேன். புலி தங்கிப் போகிய பெரிய மலைக் குகையை ஒத்தது அவனை ஈன்ற வயிறு. அவன் இது போழ்து எவணிருந்தாலும் கட்டாயம் போர்க்களத்திற் தோன்றுவான். அவண் சென்ருல் காண்பாயாக."

இதன் மூலம் நாம் பண்டைய வீர மகளிரின் மனநிலையை நன்குணரலாம். தற்காலத் தாய்மார்களைப் போல் கோழைத்தனமாக மகனது அற்ப உயிருக்காக அஞ்சவில்லை. 'எங்கிருந்தாலும் என் மகன் போர்க்களம் வருவான்' என்ற தளரா நம்பிக்கையில் கூறிய அத்தாய் அவ்வண்ணம் கூறுவதில் பெரு மகிழ்ச்சியும் அடைகின்ருள். அதுவன்ருே பெண்மை வீரம்?

போர்க்களத்திற்குத் தம் மக்கள் செல்வதை மாத்திரம் பெருமையாகக்கொள்ளவில்லை பண்டைய வீர மகளிர். போர்க்களத்தே அறம் வழுவாத தீரச் செயல்களைச் செய்ய வேண்டும் என்பதே அவர்களது வேணவா. களத்தே மானத் தாழ்வான-கோழைத்தனமான — செய்கையேதும் செய்த விடத்து சினம் மிகக் கொண்டு பொங்கி சிங்கங்களைப் போல் சீறியவர்கள் அந்த சீர்மிகு வீர மகளிர். இதற்குப் புறத்தில் ஓர் சாட்சி:

ஒரு வீர மகன் பகையரசரின் களிற்றின் மீது தனது வேலைப் பாய்ச்சுகிருன். மீண்டும் அதனை எடுக்க அவனுல் இயலாமற் போய்விடுகிறது. வெறுங்கையோடு வீடு திரும்புகிருன் அவன். இஃதெலாம் அறிந்த அவனையீன்ற மறக்குடிமாது மனம் மிக நொந்து—சினம் கொண்டு—

(4-ம் பக்கம் பார்க்க)

## களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே!

அறப்போர், வீரவுணர்ச்சி என்றெல்லாம் மறத்தமிழர்களால் பேசப்படும் இந்தக் காலத்தில், உள்ளக் கிளர்ச்சிக்கும் உண்மை வீர உணர்ச்சிக்கும் இருப்பிடமான புறநானூற்றுப் பாடல்கள் பெரிதும் பயன் அளிக்கும் என்பது, அப்பண்டை நூலை நன்கு கற்றறிந்தோர் கருத்தாகும். அவ்வாறு அறிவு படைத்தோர் எடுத்துக் கூறுவதற்கு ஏதாவது காரணம் இருக்க வேண்டும் அல்லவா? சரி. ஒரே ஒரு பாடலை எடுத்து நோக்குவோம்.

மாநிலத்தில் மக்களாய்ப் பிறந்த அனைவருக்கும் மாண்புறும் கடமைகள் உள்ளன. ஆசிரியன் என்ற முறையில் எனக்குக் கடமையிருப்பது போல, மாசறு தொழில்புரியும் ஒவ்வொருவருக்கும் கடமைகள் உள்ளன. இதனை

**"ஜெயம்"**

மறுப்பவர் அன்றி மறப்பவர் இருக்கக்கூடாது. இருந்தால் அது அவர் தம் கடமையில் தவறியவர் என்பதே எம் தாழ்மையான கருத்து. பண்டைத் தமிழரும் இதனை நன்ருக அறிந்திருந்தனர். இல்லாவிட்டால் 'உனக்கு இக் கடமை, அவனுக்கு அக் கடமை' என்று அழகாக எழுதி வைத்திருப்பார்களா!

நாம் எடுத்துக்கொள்ளும் பாடலில் ஒரு தாய், ஆமாம் தமிழ்த்தாய் ஒருத்தித் தன் கடமைகளைக் கூறுவதோடு மட்டுமல்லாமல் ஏனைய சிலரது கடமைகளையும் அழகுற எடுத்தியம்புகிருள். தாயின் கடமையைக் கூறி, பின் ஒரு தந்தையின் கடமை, கொல்லன் ஒருவனின் கடமை, மன்னனின் கடமை ஆகியனவற்றைக் கூறி, கடைசியில் தான் ஈன்ருளே அந்தக்காளை, அவனின் கடமையையும் கூறுகிருள்! ஆம்...!

மகனையீன்று, தனக்கென வைத்துக்கொள்ளாது, மற்றவர்களுக்குத் தந்துவிடல் தன்னின் கடமை என்று கூறுகிருள். நாட்டுக்காக நல்ல வீரம் நிறைந்த காளையர்களைப் பெற்றுத் தருவது தான் தாயார்களின் கடமையாம். பிறகு, தந்தையின் கடமை என்னவென்று கேட்டால். ஈன்று புறந்தந்தாளே ஒரு மகனை, அவனை நான்கு பேர் போற்றுகின்ற நல்லவனாக்குதல்தான் என்று கூறுகிருள். சரியான முறையில் வளர்த்து சான்ருேனுக்க வேண்டும் தந்தை. அதன் பின் கொல்லனின் கடமை என்ன? அருமையான வேல் ஒன்று செய்து அந்தக் காளை கையில் கொடுக்கவேண்டும் அவன் வளர்ந்தவுடன்!

இனி, நாட்டுக்கென்று நல்லரசன் ஒருவன் இருப்பான்.

(8-ம் பக்கம் பார்க்க)

## கவிதைப் பூங்கா

## கோடி காலம் வாழியவே

—தமிழ்க் கொண்டல்—

ஈழத்தமிழர் உரிமை நலம்
இயன்ற வரையில் காப்பாற்ற
ஆழச்சிறந்த அறிவுடனே
அமைதியாகப் போராடி
வாழத்தமிழர் வளமோங்கி
வையத்துயர வழிசெய்யும்
ஈழக்காந்தி எம்தந்தை
என்றும் வாழ்க வாழியவே.

அல்வாப்பேச்சு அழகு மொழி
அணையா உறுதி அகம்கொண்டான்
சொல்வாய் மொழியைச் சிறப்புடனே
செய்து காட்டும் செயற்திறலோன்
நல்வாழ்வதுவே தமிழர்க்காய்
நாளுங்காண உழைக்கின்ற
செல்வா சிறப்பாய் செகத்தினிலே
சிறக்க மாதே வாழியவே.

வடக்கும் கிழக்கும் மலையகமும்
வலிசேர் அணியாய் ஓரணியாய்
நடக்கும் வண்ணம் நமதுள்ளே
நல்ல நெறியைக் காட்டியவன்
அடக்கு முறையால் அழியாமல்
அன்னை ஈழத்தமிழவளை
இடக்கு நின்று காத்திட்ட
இனிய தலைவன் வாழியவே.

காந்தி காட்டு(ம்) வழிநின்று
கன்னி ஈழத்தமிழவளின்
சாந்தியொன்றே சகத்தினிலே
சாகும் வரையும் தனதாக
ஏந்தல் இன்றும் வாழ்கின்ருன்
இனியும் மாதே வாழியவே;
சாந்தி சாந்தி சாந்தியவன்
கசுத்தில் ஜனனநாள் சாந்தி.

தனது மானம் தமிழ்மானம்
தாழ்ந்து போக வாழ்வெண்ணு
மனது படைத்த மலர்நெஞ்சன்
மண்ணில் மனிதத் தெய்வமவன்
எனது வாழ்வு இனவாழ்வு
ஈழத்தமிழர் வாழ்வென்றே
தினமும் தமிழின் உரிமைக்காய்
தியாக வாழ்வு வாழ்கின்ருன்.

சிதையும் தமிழின் சிறப்புக்காய்
செய்த பணியால் சேர்துன்பம்
இதையும் தாங்கும் இனிமேலும்
எழப்போகின்ற துன்பங்கள்
அதையும் தாங்கி அசையாது
அன்னை தமிழின் உரிமைக்காய்
எதையும் தாங்குமிதயத்தால்
இளமை பெற்ருன் வாழியவே.

இருபத்தைந்து லட்சமதாம்
ஈழத்தமிழர் வாழ்வெண்ணி
பருவத்திங்கு பலன்காணப்
படையைக் கூட்டி நின்றிட்டான்
உருவப்பொலிவோ ஒடிந்துவிடும்
உள்ளப்பொலிவில் உறுதிமலை
பெருமைக்குரிய தலைவனவன்
பெறுக மாதே பெருவாழ்வு.

உள்ளக் கமலத் தொழிவில்லான்
உயர்ந்த கமல மலரன்னுன்
வெள்ளைக் கமல நிறமன்னுன்
விளங்கு கமல முகமன்னுன்
எள்ளுப்பூவின் நாசியவன்
இனியன் ஈழக்காந்திஎம்
கிள்ளைத்தமிழாள் குறைபோக்கி
கோடி காலம் வாழியவே.

**ஆனந்தா லேகியம்**

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தை பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கை, கணுக்களில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து நெஞ்சடைப்பு, சகல வித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை
பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3-00.

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினுல் இனமாக அனுப்புவோம்.
பெரியது ரூபா 5-50. சிறியது ரூபா 3.00.
வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:
ஆனந்தா வைத்தியசாலை,
நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு—11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எம். எஸ். பெரமன்,
நியத்தலாவை

கே: டைரக்டர் ஏ. எஸ். ஏ. சாமி இலங்கையைச் சேர்ந்தவர் என்று தினத்தந்தியில் கேள்வி-பதிலில் கூறப்பட்டுள்ளதே, உண்மையா?

ப: இலங்கையில் வளர்ந்தவர். இலங்கையிற் கல்வி கற்றுப் பட்டம் பெற்றவர்.

ஃ

க. குமார், களனி

கே: ராஜரத்தினு தமிழில் எழுதுவதைக் கனவில் கண்டேன். இதன் மர்மம் என்ன குயுக்தியாரே?

ப: அவருடைய முன்னோர்கள் தமிழர்களாம். கருத்தாழம் உள்ள கனவைத்தான் கண்டிருக்கிறீர்கள்.

ஃ

அழகன்,
அளவெட்டி

கே: சில நவநாகரிகப் பெண்மணிகள் பாடசாலைக்குச் செல்லும் பொழுது தெருவில் செல்லும் ஆண்களைப் பார்த்துச் சிரித்துக்கொண்டு செல்லுகிறார்கள். இதைப் பற்றிய தங்கள் கருத்தென்ன?

ப: அது ஆண்களை எடைபோடும் சிரிப்பு—எந்தெந்த ஆண்களை வென்று வெற்றிக்கொடி நாட்டலாம் என்பதைத் தங்களின் சிரிப்புக்குக் கிடைக்கும் பதிலிலிருந்து ஒரே நொடியில் எடைபோட்டுவிடுவார்கள்.

ஃ

தேவன்,
பலாங்கொடை

கே! நான் மணமானவன் என்பது தெரிந்தும் மங்கை ஒருத்தி என்னைத் தவிர வேறு ஒருவருடனும் வாழமாட்டேன் எனப் பிடிவாதம் செய்கிறாள். இதற்கு என்ன செய்யலாம்?

ப: அவள் செய்த மூன்று நற்செயல்களை இழிவுபடுத்தி அவளிடம் பேசுங்கள். மறந்தாவது அவளைப் பாராட்டிவிடாதிர்கள். அவளின் பிடிவாதம் தானுகத் தளர்ந்துவிடும்.

ஃ

வடிவேல்,
பொரளை

கே: காதலுக்கும் காமத்துக்குமுள்ள வித்தியாசமென்ன?

ப: பதநீருக்கும் கள்ளுக்கும் உள்ள வித்தியாசம்.

கே: என்னை ஒரு பெண் காதலிக்கிறாள். எனக்கோ அவளைக் காதலிக்கத்தெரியவில்லை. இந்த இரகசியத்தை ஒரு நண்பனிடம் கூறினேன். பிறகு அவனே அந்தப் பெண்ணைக் காதலிக்கத் தொடங்கிவிட்டானே!

ப: அவன் காதலிக்கத் தெரிந்தவன் — உங்களுக்குத் தெரியவில்லை. காதலிக்கத் தெரிந்தவன் ஒரு முட்டாள். காதலிக்கத் தெரியாதவன் ஓர் அடி முடிடான்!

ஃ

பி. ஆறுமுகம்,
கொழும்பு-13

கே: பெண்ணுக்கு அழகு தேவையா?

ப: தேவைதான். பெண்களுக்குச் சமத்துவம் அளிக்கப்படாத இந்தச் சமுதாயத்திலே பெண் தன் அழகை ஆயுதமாகக் கொண்டுதான் தனக்குத் தேவையான சமத்துவ உரிமை, வசதிகள் எல்லாம் பெற்றுக்கொள்கிறுள்.

ஃ

சரோஜினி,
கொழும்பு—5

கே: எனது சிநேகிதி தான் நீண்ட காலமாகக் காதலித்து வந்த வாலிபனை மணந்துகொண்டாள். இப்பொழுது கணவன் தன்னை முன்போலக் காதலிக்கவில்லை என்று கூறுகிறுள். காரணம் என்ன?

ப: ஒரு பெண்ணை எப்போதும் ஒரே மாதிரிக்காதலிக்க முடியாது. காரணம் திருமணத்துக்குப் பின் அவள் முற்றிலும் வேறு ஒரு பெண்ணுக மாறி விடுவதுதான். திருமணத்துக்கு முன்பிருந்த காதல், திருமணத்துக்குப் பிறகு ஒருவித பாசமாக மாறிவிடுகிறது.

ஃ

மு. கிருஷ்ணன்,
கண்டி

கே: மத்திய மாகாணத்தில் வசிக்கும் மலைநாட்டுத் தமிழ் மக்கள் தமிழ் அரசுக்கட்சியை ஆதரிக்க விரும்புகிறார்களே, இதற்கென கண்டியில் ஒரு த. அ. க. கிளையை நிறுவக்கூடாதா?

ப: கட்சித் தலைமைப் பீடத்துக்கு உங்கள் கருத்தைத் தெரிவியுங்கள்.

கே: எங்கள் பாடசாலையில் உள்ள மாணவர்கள் தமிழரசுக் கட்சி அங்கத்தவராகச் சேருவதற்குத் துடியாய்த் துடிக்கிறார்கள். இதற்கு என்ன செய்வதென்று ஒரு வழியைக் கூறுங்கள்?

ப: கட்சிப் பணிமனைக்கு எழுதுங்கள். ஆவன செய்வார்கள்.

ஃ

யோகராணி,
கொக்குவில்

கே: குயுக்தியாரே! நான் உமக்கு எனது கிராமத்தில் ஒரு பெண் பார்த்திருக்கிறேன். நீர் அதற்குச் சம்மதமா!

ப! டீஸ்! காதைக் கடித்தால் போல் மெதுவாகக் கேளுங்கள்! குயுக்தி மாமி காதில் விழுந்துவிடப் போகிறது!

ஃ

தா. சுவாமிநாதன், பண்

கே: ரஷ்யா வானவெளிக் கனுப்பிக் கொண்டிருக்கும் ராக்கெட்டின் நிலை யாது? இவர்கள் சந்திரனை அடைவது பற்றிய உமது கருத்தென்ன?

ப: வானவெளிப் பிரயாணங்களுக்குப் பெருந்தொகையான பணம்செலவு செய்ததில், ரஷ்யாவில் இதர அபிவிருத்தி வேலைகள் ஓரளவு தடைப்பட்டுள்ளனவாம். ஆகையால் இன்றுள்ள நிலைமையில் அமெரிக்கர் தான் சந்திரனில் முதலில் அடி வைப்பார்கள் என்று தெரிகிறது. 1970ல் அமெரிக்கர் சந்திர மண்டலத்தில் இறங்குவார்களென சென்ற வாரம் அறிவிக்கப்பட்டது.

ஃ

மு. து சுப்புலட்சுமி,
ஆ. சுப்பையா, ராசாகலை தோ.

கே: மனிதன் பணம் சேர்த்து வைப்பது எதற்காக?

ப: சதா கவலைப்பட்டுக் கொண்டிருப்பதற்காக.

ஃ

அரிசி ஆலைச் சொந்தக்காரர்கள்
வவுனியா மாவட்டம்

கே: எமக்கு வரும் சிங்கள காகோலைகளைத் தமிழில் அனுப்பும்படி கேட்டதற்கு அதே கந்தோரில் வேலைசெய்யும் ஒரு தமிழ் எழுதுவினைஞர் எங்களில் அதிகமாகக் கோபிக்கிறார். இவர் அப்படிக் கோபிப்பதற்குக் காரணம் என்ன?

ப: இரண்டொரு சிங்கள எழுத்துக்களைப் படித்த அள[illegible] அலுவலில் இருப்பவர்களை விட் 10 படி முன்னே தள்ளிச் சென்று விடுகிறார்கள். இத்தனைக்கும் ஒரு சிங்களச் சொல்லைப் பிழையின்றிப் பேசவோ எழுதவோ அவர்களுக்குத் தெரியாது. அத்தகைய எட்டப்பர்கள் விரைவில் தக்க படிப்பினையைப் பெறுவார்கள்.

ஃ

எம். ஆறுமுகம்,
நானுஓயா

கே: நாகரிகம் வளர்ந்து விட்டது என்கிறான் என் நண்பன். நான் நாகரிகம் மறைந்துவிட்டது என்கிறேன். யார் கூறுவது சரி?

ப: நகரப் புறங்களிலே நவநாகரிக நாரீமணிகளைப் பார்க்கும்போது நீங்கள் கூறுவது சரி. பொதுவாக மனித வளர்ச்சியைப் பார்க்கும்போது நண்பர் சொல்வது சரி.

ஃ

மூர்த்தி,
வரக்காப்பொலை

கே: நான் எல்லோரையும் நம்பினேன். ஆயினும் நம்பி மோசம் போனேன். இனி மேலும் மோசம் போகாதிருக்க வழி என்ன?

ப: யார் யாரை நம்ப வேண்டுமோ அவர்களை மட்டும் நம்புங்கள். அதிலும் பெண்களை நம்புவதில் இரட்டிப்புக் கவனம் வேண்டும்.

ஃ

வி. குமாரவேலு,
தெமோதர

கே: இலங்கை அரசாங்கம் எப்பொழுது தமிழை அரசாங்க மொழியாக்கும்?

ப: நான் பிழையின்றிச் சரியாகக் கூற வேண்டுமானால், சமஷ்டி ஆட்சிமுறை ஏற்பட்டால் நிச்சயம் தமிழ் அரசாங்க மொழியாகும்.

## நாணயம் பெற்றிட நாணயம் விற்றவர்!

—("களப்பூர்—கவிஞன்")—

அவன்:- செந்தமிழ் கற்றிங்கு
சேவைசெய் வாத்திக்கு
சிங்களம் ஏதுக்கடி?—செல்லம்மா
சிங்களம் ஏதுக்கடி?

அவள்:- சிங்களச் செக்கினை
வாங்கிய வாத்தியார்
எங்களுக் காகாதையா—செல்லையா
எங்களுக் காகாதையா

அவன்:- கல்விப் பகுதியில்
காக்காய் பிடிக்கவே
காவடி போகுதடி—பின்புறம்
சாவடி போகுதடி

அவன்:- பந்தம் பிடித்திரு
பாதத்தில் வீழ்கிற
பாதகர் பார்த்தோமையா-செல்லையா
பாதகர் பார்த்தோமையா

அவன்:- காசைக் கருதியே
கற்பினை விற்பவர்
நற்குல மாமோடி?—செல்லம்மா
நற்குல மாமோடி?

அவள்:- கற்பெனச் சொன்னது
சொற் திறம்பாமை
காட்டினள் ஔவைவழி-செல்லையா
காட்டினள் ஔவைவழி

எழுத்தறி வித்தவர்
எழுத்தில் பொறித்ததை
ஏலத்தில் மாற்றலையா-ஊரெலாம்
ஏளனம் செய்யலையா

அவன்:- நாணயம் பெற்றிட
நாணயம் விற்றதால்
நாடு சிரிக்குதடி—தமிழ்
நாடு சிரிக்குதடி

திருவாளர்
குயுக்தியார்
மே/பா சுதந்திரன்
தபால் பெட்டி இல. 1183
கொழும்பு-12.

இம் முகவரியைக் கத்தரித்து தபால் அட்டையில் ஒட்டியனுப்பப்படும் வினுக்கள் மட்டுமே கவனத்திற்கு எடுக்கப்படும்.

சூரியம், விரமுனை

கே: இரண்டுமுறை இரண்டு கணவர்களைத் திருமணம்செய்து கொண்ட ஒரு பெண் மூன்றுவது முறையாக என் நண்பரைக் காதலிக்கின்றுள். அவர் என்ன செய்ய வேண்டும்?

ப: முந்திய கணவர்களை விவாகரத்துச்செய்துகொண்டவராயின், அவரைக் காதலித்தோ காதலிக்காமலோ நண்பர் மணந்துகொள்வது தவறன்று.

ஃ

ச. நடராசா, காரைநகர்

கே: இந்திய மக்களை வெறுக்கும் சிங்கள மக்கள் அசல் இந்தியரான புத்தர் பெருமானை, வணங்கக் காரணம் என்ன?

ப: சிங்கள மக்கள் இந்திய மக்களை வெறுக்கிறார்களென்பது தவறு. இந்தியாவைச் சீனு தாக்கியபோது 'புத்த பிரான பிறந்த பாரதத்துக்கே எங்கள் ஆதரவு' என்று சிங்கள பௌத்தர்கள் கூறினர்களே. வகுப்புவாதச் சிங்கள அரசியல் வாதிகளின் கூச்சல்தான் சிங்களப் பொது மக்களின் நல்லெண்ணத்தைப் பாழாக்குகிறது.

ஃ

சநசா, காரைநகர்

கே: மாணவ, மாணவிகளின் காதல் திடீரென இடையில் பூகம்பம் ஆவதேன்?

ப: இதற்கு இரு காரணங்கள் உண்டு. (1) வெளி உலகத் தொடர்பில்லாத வெறும் பாடசாலைக் காதல். (2) அனுபவமின்றிக் காதல் உலகில் பிரவேசித்தல்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுயநலக் கும்பலுக்கு மலையகத்தில் இடமில்லை

—————0—————

## மூவர்ணக் கொடியின் கீழ் முப்பது லட்சம் மக்களும் அணிவகுப்பார்கள்

## தோட்டத் தலைவர்கள் கூட்டத்தில் சிவானந்தசுந்தரம் உரை

'சும்மாகிடந்த சங்கை ஊதிக்கெடுத்தான் ஆண்டி' என்றநிலையை மலையகத்தில் இ. தொ. கழகம் உருவாக்கிவிட்டது என்று இ. தொ. காங்கிரஸ் தலைவர் கூறியிருக்கிறார். கழகம் சும்மாகிடந்த சங்கை ஊதுவதுடன் மட்டும் நிற்கப் போவதில்லை, சங்கநாதமும் எழுப்பப்போகிறது. அந்த நேரத்தில் சுயநலக் கும்பலுக்கும் சுரண்டல் பேர்வழிகளுக்கும் நிச்சயம் மலையகத்தில் இடமில்லாது போகும். இதையுணர்ந்து தான் இன்று காங்கிரஸ் இயக்கங்களும் இடதுசாரி இயக்கங்களும் மலையகத்தில் மரண ஓலம் எழுப்புகின்றன.

இவ்வாறு இ. தொ. கழக இணைப் பொருளாளர்களில் ஒருவரான திரு. க. சிவானந்த சுந்தரம் கடந்த 8ம் திகதி அட்டன் நகரில் நடைபெற்ற கழகத் தோட்டக் குழுத் தலைவர்கள் கூட்டத்தில் உரை நிகழ்த்துகையில் கூறினார்.

திரு. இராமையா தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் மேலும் அவர் பேசுகையில் கூறியதாவது:-

### கழகத்தின் வளர்ச்சி

'ஓர் ஆண்டுக்கு முன்னர் நடைபெற்ற கழகத்தின் ஆரம்பவிழாவின்போது ஐம்பது தொழிலாளர் தானும் சமூகம் கொடுக்கவில்லை. இன்று 150 தோட்டத் தலைவர்கள் கலந்துகொள்ளும் இந்த கூட்டத்தைப் பார்க்கையில் கழகத்தின் சேவையையும் தேவையையும் மலையக மக்கள் உணர்ந்து விட்டார்கள் என்பது தெளிவாகிறது.

கழகம் தனது ஒருவருட காலத்துள் ஆற்றியிருக்கும் சேவை மலையக மக்களை உணர வைத்திருக்கிறது. அதே நேரத்தில், மலையகமக்களின் ஏகப் பிரதிநிதிகள் என்று கூறிக்கொண்டு இயங்கிவந்த காங்கிரஸ் இயக்கங்கள்மத்தியில்இன்று மரண ஓலம் எழுந்திருக்கிறது.

### தொண்டமான் கூற்று

அண்மையில் இ. தொ. காங்கிரஸ் தலைவர் திரு. தொண்டமான் ஒரு கூட்டத்தில் பேசுகையில் கழகத்தை வேண்டியமட்டும் வைதிருக்கிறார். 'சும்மா கிடந்த சங்கை ஊதிக்கெடுத்தான் ஆண்டி' என்பதுபோல் அமைந்துவிட்டது இ. தொ. கழகத்தின் தோற்றம் என்று வேறு கூறியிருக்கிறார்.



திரு. க. சிவானந்த சுந்தரம்

மலையக மக்கள் என்ற சங்கு தேடுவார் அற்று மிதிபடும் பொருளாக இருந்தது உண்மை. அந்தச் சங்கை இன்று கழகம் எடுத்து ஊதுவதும் உண்மை. கழகம் சங்கை ஊதுவதுடன் மட்டும் நின்றுவிடாது. சங்கநாதமும் எழுப்பப்போகிறது. அப்பொழுது இந்தகாங்கிரஸ் இயக்கங்கள் இயங்கிக்கொண்டிருந்தால் 'சும்மா கிடந்த சங்கை ஊதிய'தன் பயனைப் புரியும்!

### வியாபார நோக்கம்

மலையகம் வாழ் தமிழ் பேசும் தொழிலாளரின் யானைப்பலத்தைஉணராமல் காங்கிரஸ் இயக்கங்கள் இயங்கிவருகின்றன. காங்கிரஸ் இயக்கங்களோ அல்லது இடதுசாரித் தொழிற் சங்கங்களோ மலையகம்வாழ் தமிழ் தொழிலாளரின் நன்மைக்காக உழைப்பதாகத் தெரியவில்லை. மலையகத்தில் தொழிற்சங்கம் நடத்துவதை இவர்கள் ஒரு வியாபாரமாகக் கருதுகிறார்கள்.

இரண்டு காங்கிரஸ் இயக்கங்களும் இணைந்திருந்த காலத்தில் அவர்களின் மாத சந்தாப்பண வருமானம்மட்டும் 80000 ரூபா என்று அறியப்படுகிறது.

இந்த 80 ஆயிரம் ரூபாவில் எட்டு ரூபாதானும் மலையகச் சிறுர்களின் கல்வி வளர்ச்சிக்காக இந்த இயக்கங்கள் செலவு செய்திருக்கின்றனவா என்றால் இல்லை.'

### அறிவு வளர்ச்சியை விரும்பவில்லை

அவர் மேலும் தொடர்ந்து பேசியதாவது:-

'ஐந்து வயது முதல் பதினுலு வயதுவரை உள்ள தோட்டப் பிள்ளைகளுக்கு கட்டாய கல்வி என்று சட்டம் இருக்கிறது. இதை அமுல் நடத்தும்படி காங்கிரஸ் தொழிற்சங்கங்களோ அல்லது இடதுசாரித் தொழிற்சங்கங்களோஇன்றுவரை தோட்ட முதலாளிமாரைக் கேட்டது கிடையாது.

மலையகச் சிறுர்கள் ஐந்தாம் படிவத்திற்குமேல் கல்விகற்பதை இந்த இயக்கங்கள் விரும்பவில்லை. காரணம், மலையக மக்கள் அறிவு பெற்று நாட்டு நிலையை——இனத்தின் இழிநிலையை உணர்ந்துவிட்டால் தூங்கிக்கிடக்கும் தொழிற்சங்கங்களுக்கு இடமில்லாமல்




போய்விடும் என்ற பயம். மலையக மக்கள் கல்வி அறிவு பெருதவரையில் அவர்களை மாடுபோல் பாவித்து காங்கிரஸ் இயக்கங்களும் இடதுசாரி இயக்கங்களும் அவர்களின்மீது சவாரி செய்யலாம் அல்லவா?


### அலுவலக முகவரி மாற்றம்

இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் வட்டக்கொடை மாவட்டக் கிளையின் அலுவலகம் இம்மாதம் முதல் கீழ்க்காணும் முகவரிக்கு மாற்றப்பட்டுள்ளது என்று இ. தொ.கழக மாவட்டப் பிரதிநிதி அறிவித்துள்ளார்.

இலங்கைத் தொழிலாளர் கழகம்,
47, கொத்மலை வீதி,
தலவாக்கொல்லை


### கழகம் எடுத்த தீர்மானம்

மலையக மக்கள் அறிவு பெறவேண்டும், இன்றிருக்கும் இழிநிலையை உணர வேண்டும், அவர்களும் அரியாசனத்தில் சரியாசனம் பெற்று வாழவேண்டும் என்று கழகம் விரும்புகிறது. எனவேதான் கழகத்தின் செயற்குழுக் கூட்டத்தில் ஒரு தீர்மானத்தைஎடுத்துள்ளோம்.

தோட்டப் பாடசாலைகள் அனைத்தும் எட்டாம் படிவம் வரை உயர்த்தப்படவேண்டும். இதை உடன் செய்து கொடுக்கும் படி கழகம் தோட்டத்துரைமார் சங்கத்தைக் கேட்கவிருக்கிறது.

இத்தனை ஆண்டுகளாக இயங்கிவந்த காங்கிரஸ் இயக்கங்கள் மலையக தொழிலாளரின் நிலையை உயர்த்த உருப்படியாகசெய்ததுதான் என்ன? அவர்களின் சாதனைகள் வேதனைதருவதாகவிருக்கின்றன.

### ஒன்று படுவோம்

மலையகம்வாழ் 12 லட்சம் தமிழ்பேசும் தொழிலாளர்களை இந்நாட்டின் ஏனைய பகுதியில்வாழும் தமிழ் பேசும் மக்களுடனே அல்லது தொழிலாளர்களுடனே கலந்து இணைந்துவாழ முடியாத முறையில் ஒரு புறத்தில் ஒதுக்கிவைத்திருந்தன இந்த இயக்கங்கள். இன்று கழகம் தோன்றிய குறுகிய காலத்திற்குள் ஏனைய பகுதியில் வாழும் தமிழ்பேசும் மக்களுக்கும் மலையகம்வாழ் தமிழ்பேசும் மக்களுக்கும் இடையில் ஒரு பிடிப்பை-பற்றை உருவாக்கியுள்ளது. இன்னும் சில காலங்கட்குள் இந்நிலை வளர்ந்து முழுஉருப்பெறும். அத்துடன், இந்நாட்டில் வாழும் 34 இலட்சம் தமிழ்பேசும்மக்களும் மூவர்ணக்கொடியின் கீழ் அணிவகுப்பார்கள்.

### சங்கநாதம் செய்வோம்

அன்று மலையகத்தில் நாம் ஊதிய சங்கு, சங்கநாதம் செய்யும் இந் நாட்டில் வாழும் தமிழ்பேசும் மக்கள் அனைவரும் சுதந்திர புருஷர்களாக பெரும்பான்மை மக்களுடன் சமத்துவ நிலையில் சரிநிகர் சமானமாக வாழ்வார்கள். சுயநலக் கும்பலுக்கும் சுரண்டல்பேர்வழிகளுக்கும்இடமில்லாதநிலை உருவாகும். அந்த புதிய சுதந்திர தமிழர் சமுதாயத்தை காண விரையும் புரட்சிவெள்ளத்தில் காங்கிரஸ் இயக்கங்கள் அடித்துச் செல்லப்பட்டுவிடும். இது நிச்சயம்."

மாவட்டப் பிரதிநிதி திரு. எஸ். கனியபெருமாள் உட்பட பலர் உரை நிகழ்த்தினார்கள்.

## பண்டைத்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

'பகையரசனது போரில் வென்று அக்களத்தே தானும் இறந்து படாமல் நீ திரும்பினை. மாற்றானின் களிற்றின் கண் எய்த நினது வேலைத் திரும்பிப் பெற உன்னால் இயலவில்லை. இதனால் எம் முன்னோரின் விழுமிய வீரத்திற்கே வழுவை உண்டாக்கி விட்டாய்; உன்னைப் பத்து மாதம் பாதுகாத்து, சுமந்திருந்த இந்த வயிற்றை அறுப்பேன்; அறுப்பேன்" என்று கதறினாள்.

அந்தோ! அந்த வீர உளம்-பண்புளம்— இன்று எவண் சென்றதோ? புறங்கொடுத்த மகனை ஈன்ற வயிற்றை அறுப்பதாக ஆணையிட்ட அந்த அன்னையின் வழித்தோன்றல்களான நம்மவரின் மனதிலே வீர உணர்ச்சி உளதோ?

அடுத்து- புறநானூற்றிலே பொன்முடியார் எனும் பெண்பாற் புலவர் தாய், தந்தை, அரசன், மகன் முதலியோருக்குள்ள கடமைகள் எவை எவை எனக் கூறுவதைக் கவனிப்போம்.

"ஈன்று புறந்தருதல்
என்றலைக் கடனே;
சான்றோ னாக்குதல்
தந்தைக்குக் கடனே;
வேல் வடித்துக் கொடுத்தல்
கொல்லர்க்குக் கடனே;
நன்னடை நல்கல்
வேந்தற்குக் கடனே;
ஒளிருவாள் அருஞ்சம
முறுக்கிக்
களிறெறிந்து பெயர்தல்
காளைக்குக் கடனே"

என்கின்றார், அவ்வீரப் புலமையளின் இதயத்துதித்த வீர உணர்ச்சிப் பெருக்கினை இப்பாடலில் நாம் காணலாம். 'ஒளிருகின்ற வாள் கொண்டு சென்று வீர முறுக்குடன் போர் புரிந்து—களிறின்மேல் எய்து-மீளல் தான் மகனது கடன்' என்று கூறுவதில் தனிப் பெருமிதம் மிளிர்வதைக் காணலாம்.


இனி, பூங்கணுத்திரை எனும் புகழ்மிக்க பூணைய் மொழிப் புலமையள் புறநானூற்றிலே பாடியிருப்பதைப் பார்ப்போம். 'கொக்கின் இறகுபோன்ற நரைத்த கூந்தலை உடைய முதுப் பெண், தன் மகன் போரிலே யானையை வீழ்த்திக் கொன்று தானும்மடிந்தான் என்னுஞ் செய்தி கேட்டு அவனைப் பெற்ற போது தானடைந்த மகிழ்ச்சியினும் அதிக மகிழ்ச்சியை அடைந்தாள்' என்று இவ்வாறு கூறுகின்றார்.

இதனால், ஒரு மகவை அக்காலப் பெண்டிர் பெறுவது ஓர் அற்புத வீரச் செயலையேனும் அவரிடங்கண்டு மகிழுதற்கே எனக் கருதினரென்பதும், அவர் தம் வீர மரணத்தில் மனமகிழ்ச்சியேயன்றி அவர்கட்குத் துன்பமில்லையென்பதும் விளங்குகிறது.

'ஈன்ற பொழுதினும் பெரி
துவக்கும்-தன் மகனைச்
சான்றோன் எனக் கேட்டதாய்'

என்ற வள்ளுவப் பெருந்தகையின் பொய்யாமொழி இவண் பொய்க்காதிருப்பதை வெளிப்படையாகக் காணலாம். 'தன் புத்திரன் தன்னிடமே என்றும் இருந்தால் போதும்; அவனுக்கு முன் நான இறந்து விட வேண்டும்' என்று எண்ணும் இக்கால மடமாதரியல்பும் மேற்குறிப்பிட்ட வீரத் தாயார் இயல்பும் எவ்வளவு மாறுபட்டுள்ளன?


இன்றைய அதிசயமான பைப் எஸ்-லொன்



உங்கள் வீட்டில், ஸ்டோரில், அல்லது தொழிற்சாலையில் தண்ணீர் வசதி அமைத்துக்கொள்ளும் உத்தேசம் உங்களுக்கு உண்டானுல் எஸ்-லொன் பைப்புகள் மிகக் குறைந்த செலவில் மேலானபயன் தரவல்லவை என்பதை மறந்து விடாதீர்கள். இவை வளையக்கூடியவை, கனக்குறைவானவை, நேரத்தையும் கூலியையும் மிச்சப் படுத்தும் - இணைப்பதும் வெகு சுலபம்-நீங்களே செய்யலாம். எஸ்-லொன் உக்காது கறையானை அண்டவிடாது, அரிப்பு ஏற்படுத்தாது, கிருமி, கறள், அழுக்குப்பட எதிர்ப்புடையது.
ஆகவே பணத்தை மிச்சம் பிடிக்க வேண்டுமானுல், உங்கள் எஸ்-லொன் பைப் தேவைகளை எந்த பெரிய ஹார்ட்வெயர் ஸ்டோரிலிருந்தாகிலும் இன்றே வாங்குங்கள்.
ராஜேந்திரம்ஸ் லிமிட்டெட்.
மகாராஜா கட்டிடம், பேங்ஷால் வீதி, கொழும்பு-11.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமது துன்பங்களுக்கு காரணம் என்ன?

நமது துன்பங்கள் அத்தனைக்கும் அடிப்படைக் காரணம் சரீர பலவீனமேயாகும். சரீர பலவீனத்தால் மூளையும் பலம் குன்றிவிட்டது. நாம் சோம்பேறிகளாகி விட்டோம் உழைப்பது கிடையாது. ஒருவரோடொருவர் சேர்ந்து வாழ்வது கிடையாது. நம்முள் ஒருவரையொருவர் நேசிப்பதில்லை. நாம் முற்றிலும் சுத்த சுய நலவாதிகளாகி விட்டோம். கிளியைப் போன்று அநேக விஷயங்களை திருப்பித் திருப்பி பேசுகிறோம்-செயல்படுவதில்லை பேச்சுடன் நிற்பது நம்முடைய பழக்கமாகி விட்டது இதற்குக் காரணம் சரீர பலவீனம் தான். எனவே முதலில் நாம் சரீரத்தைப் பயன்படுத்த வேண்டும். நம் சிறுவர்களும் பலமுடையவர்களாகத் திகழவேண்டும்.

## சுவாமி. விவேகானந்தர்

பலத்தைப் புகட்டும் சிறந்த உபநிஷதங்களை நாம் பெற்றிருந்தும், ரிஷிகளின் பரம்பரையில் வந்தவர்களென்று நாம் பெருமிதமாகச் சொல்லிக் கொண்டபோதிலும் நாம் பலவீனர்களாகத்தான் இருக்கிறோம்.

மற்ற நாட்டு மக்களோடு நம்மைச் சீர்தூக்கிப் பார்த்தால் நாம் அவர்களைவிடப் பலவீனர்கள் என்பதில் ஐயமில்லை.

முதலாவதாக நாம் சரீர பலம் குன்றியவர்களாக இருக்கிறோம். இச்சரீர பலவீனமே நம்முடைய மூன்றில் ஒரு பங்கு துன்பத்துக்குக் காரணமாக இருக்கிறது. நாம் சோம்பேறிகள். நாம் உழைப்பது கிடையாது. நம்முள் ஒருவரோடொருவர் சேர்ந்து வாழ்வது கிடையாது. நம்முள் ஒருவரையொருவர் நேசிப்பதுமில்லை. நாம் முற்றிலும் சுயநலக்காரர்களாய் இருக்கிறோம். ஒருவரையொருவர் பகைத்துக்கொள்ளாமலும், ஒருவர் மீது ஒருவர் பொறாமைப் படாமலும் மூன்று பேர்கள் சேர்ந்து நாம் வாழ மாட்டோம்.

நம்மவர் ஒழுங்குப் பாடும் கட்டுத்திட்டமும் இல்லாதவர்கள். சுயநலம் நிறைந்தவர்களாய் நெற்றியில் அணியும் சின்னத்தை இப்படி அணிவதா அப்படி அணிவதா, என்பதைப் பற்றி நூற்றுக்கணக்கான வருஷங்களாக நாம் சண்டையிட்டுக் கொண்டிருக்கிறோம்.

### நமது செயல்

உண்ணும் உணவை வேறொருவர் பார்த்துவிட்டால் அவ்வுணவு கெட்டு விடுகிறதா இல்லையா என்பது போன்ற அற்ப விஷயத்தைக் குறித்துக் கணக்கற்ற நூல்களை நாம் எழுதித் தள்ளுகிறோம். இத்தகைய செயலைத்தான் சென்ற சில நூற்றாண்டுகளாக நாம் செய்து வந்திருக்கிறோம். இது போன்ற அற்ப விஷயத்தில் மனதை ஈடுபடுத்தியிருக்கும் ஒரு சமுதாயத்திடமிருந்து உயர்ந்த ஆராய்ச்சியையோ உயர்ந்த வாழ்க்கைத் தத்துவத்தையோ நாம் எதிர்பார்க்க முடியாதல்லவா?

இதைக் குறித்து வெட்கப்படவேண்டிய நிலையில் நாம் இருக்கிறோம். அற்ப விஷயங்கள் என்று நமக்குத் தோன்றுவதையும் நம்மால் விட முடிவதில்லை.

### சரீரபலம் வேண்டும்

கிளியைப் போன்று அநேக விஷயங்களைத் திருப்பித் திருப்பிப் பேசுகிறோம். ஆனால் அவைகளை நாம் செயல்படுத்துவதில்லை. வெறும் பேச்சுப் பேசிவிட்டுச் செயல்படாதிருப்பது நம்முடைய பழக்கமாகப் போய்விட்டது. சரீர பலவீனம்தான் இதற்குக் காரணம். சரீர பலவீனத்தால் நம்முடைய மூளையும் பலம் குன்றியிருக்கிறது. அதனால் நாம் எதையும் செய்ய முடிவதில்லை. ஆகையால் முதலில் நாம் சரீரத்தைப் பலப்படுத்த வேண்டும். நம் சிறுவர்கள் பலமுடையவர்களாகத் திகழ வேண்டும்.

உங்களுடைய இரத்தம் நீர் போன்று சக்தியையிழந்து விட்டது. உங்களுடைய மூளை சுறுசுறுப்பற்றதாகப் போய்விட்டது. உங்களுடைய உடல் பலம் குன்றி விட்டது. ஆகையால்தான் நீங்கள் ஒன்றும் செய்ய முடிவதில்லை. நீங்கள் உடலைச் சக்திவாய்ந்த உடலாக மாற்றியமைத்தாக வேண்டும். உடல் பலவீனமே இதற்குக் காரணம், வேறொன்றுமில்லை.

### செயல்பட வேண்டிய காலம்

சென்ற நூறு [illegible]கச் சீர்திருத்தங்கள், மேலான இலட்சியங்கள் ஆகிய விஷயங்களைப் பற்றிப் பேசி வந்திருக்கிறோம். அத்தகைய சீர்திருத்தங்கள் செயல்பட வேண்டியகாலம் வந்திருக்கிற பொழுது நீங்கள் இருந்த இடம் தெரியாமல் இருக்கிறீர்கள்.

சீர்திருத்தம் என்ற பெயரே உங்களைக் குறித்த இடத்தில் நகைப்புக்கிடமாக இருக்கிறது. இதற்குக் காரணம் உங்களுக்குத் தெரியாமலில்லை. நீங்கள் நன்றாக அறிவீர்கள்.

### புழுக்களின் நிலையில் நாம்

அதாவது நீங்கள் பலவீனர்களாக இருப்பதுதான். உங்கள் உடலில் பலமில்லை; உங்கள் மனதில் திடமில்லை. உங்களிடத்தில் உங்களுக்கு நம்பிக்கையும் இல்லை. ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக ஜாதிக் கொடுமையும், அரசர்கள் கொடுமையும், அந்நியர்களது ஆட்சியும், சமுதாயக் கொடுமையும் உங்கள் பலத்தையெல்லாம் ஒடுக்கி உங்களிடமிருந்து போக்கி விட்டன.

என்னுடைய சகோதரர்களே! உங்களுடைய முதுகெலும்பு முறிந்து போய்ப் புழுக்கள் நிலைக்கு வந்துவிட்டீர்கள்! யார்தான் உங்களுக்குப் பலம் கொடுக்கப் போகிறார்கள். பலம்; பலம்தான் தேவையென்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். பலத்தைப் பெறுவதற்கு முதல் உபாயம் உபநிஷதங்களைப் போற்றத் தெரிந்து கொள்ள...வேண்டும்.

### நம்பிக்கை வையுங்கள்

"நாம் ஆத்ம சொரூபம்" என்பதில் ஒவ்வொருவரும் நம்பிக்கை வைக்கவேண்டும். 'என்னைக் கத்தி வெட்டாது; எந்த ஆயுதமும் என்னைத் தாக்காது; நெருப்பு என்னை எரிக்காது; காற்று என்னை உலர்த்தாது; நான் சர்வ சக்திமான்; நான் சர்வக்ஞன்' என்ற ஆத்ம போதத்தை வளர்க்கும் வார்த்தைகளை உங்களுள் ஒவ்வொருவரும் திருப்பித் திருப்பிச் சொல்ல வேண்டும்.

பலவீனர்கள் என்று உங்களை நீங்கள் சொல்லிக் கொள்ளாதீர்கள். எதையும் செய்து சாதிக்க முடியும்; செய்ய முடியாதது ஒன்றுமில்லை. மகத்தான ஆத்ம சொரூபமாக நீங்கள் இருக்கிறீர்கள் என்ற கருத்தில் ஆழ்ந்த நம்பிக்கை வையுங்கள்.

### தனி உரிமைகள் அழியட்டும்

[illegible] துடன் செய்வீர்களானால் அதனால் உங்களுக்கு நன்மை விளையும். சிறு காரியமாயிருந்தாலும் அதை நன்கு செய்தால் அதன் மூலம் சிறந்த பயன் பெறலாம். ஆகையால் ஒவ்வொருவரும் தங்களால் இயன்ற அளவு சிரத்தையுடன் செயல் புரிந்தால் போதும்.

மனித சமுதாயம் இயல்பாகவே பல பிரிவுகளாகப் பிரிந்து கிடக்கிறது. அவற்றுள் ஒரு பிரிவினருக்கென்று ஏதாவது தனி உரிமைகள் இருந்தால் அவைகள் அழிந்து போகட்டும்.

### அநீதிகள் ஒழியட்டும்

சமுதாயம் பிரிவு பட்டிருப்பதுதான் இயல்பு. சமுதாய வாழ்வில் நான் ஒரு வகையான தொழிலில் ஈடுபட்டிருக்கலாம். நீங்கள் நாட்டை ஆட்சி புரியலாம், நான் செருப்புத் தைக்கலாம். ஆனால் அதன் காரணமாக என்னைவிட உங்களை உயர்ந்தவர் என்று சொல்லிவிட முடியாது. ஏனென்றால் என்னைப் போன்று உங்களால் செருப்புத் தைக்க முடியுமா? உங்களைப் போன்று நான் ஆட்சி புரிய முடியுமா? செருப்புத் தைப்பதில் நான் நிபுணனாகவும் வேதங்களைப் படிப்பதில் நீங்கள் நிபுணனாகவும் இருக்கலாம். எனவே என்மீது அதிகாரம் செலுத்துவதற்கு உங்களுக்கு என்ன அதிகாரம் இருக்கிறது?

கொலை புரிந்த ஒருவன் போற்றப்படுவதும், பழமொன்றைத் திருடியதற்காக மற்றொருவன் தண்டிக்கப்படுவதும் ஜாதியை அடிப்படையாகக் கொண்டு நிகழ்வது உண்டு. இந்த அநீதிகள் ஒழியவேண்டும்.

### ஞான ஒளி பரவட்டும்

மனிதர்கள் பல பிரிவுகளாக இருந்து வாழ்வது நல்லது. அப்படி வாழ்வதுதான் வாழ்க்கையிலேற்படும் பல பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்குப் பயன்படும்.

மக்கள் பல பிரிவுகளாகப் பிரிந்து வாழ்வதை நீங்கள் தடுத்து விட முடியாது. எங்கு சென்றாலும் அங்கு மக்கள் பல பிரிவுகளாகப் பிரிந்து வாழ்வதை நீங்கள் அறிவீர்கள். ஆனால் எந்தப் பிரிவினருக்கும் தனி உரிமைகள் இருக்கக் கூடாது. அப்படித் தனியுரிமை பாராட்டும் இயல்பைத் தலையெடுக்காது அடித்துத் தள்ள வேண்டும்.

ஒளிக்கெல்லாம் ஒளியாக இருக்கும் ஞான ஒளியை உலகெங்கும் பரப்ப முயலுங்கள். ஒவ்வொருவரையும் இந்த ஞான ஒளி சென்று அடையட்டும். ஒவ்வொருவரும் கடவுளை அடையும் வரையிலும் உங்களுக்கு அமைந்துள்ள வேலை முடியாது.

### உன் கடன் பணி செய்வதே

ஏழைகளுக்கும் இந்த ஞான ஒளியைக் கொடுங்கள். செல்வந்தர்களுக்கு ஏழைகளை விட அதிக ஞான ஒளி தேவை, ஏனெனில் அவர்கள் செல்வச் செருக்கில் மூழ்கிக் கிடக்கிறார்கள். கல்லாதவர்களுக்கும் இந்த ஞான ஒளியைக்கொடுங்கள். கற்றவர்களுக்கு இன்னும் அதிகமான ஞான ஒளியைக் கொடுங்கள். கல்லாதவர்களைவிடக்கற்றவர்க்கு அதிக ஞான ஒளி தேவை. ஏனெனில் தற்காலக் கல்வி கொடிய மமதையைக் கற்றவர்களிடம் வளர்த்திருக்கிறது.

இங்ஙனம் ஞான ஒளியை எல்லோருக்கும் கொடுக்க முயலுங்கள். பயனை ஆண்டவனிடம் சமர்ப்பித்து விடுங்கள். ஏனெனில் பகவான் கீதையில், "உன் கடன் பணி செய்வதாகும். பலனை எதிர்பாராதே. கர்ம பலனில் கட்டுண்டு விடாதே. அதே சமயத்தில் கர்மம் செய்யாதும் இராதே" என்று பகர்ந்திருக்கிறார்.

நம் முன்னோர்க்கு இத்தகைய அரும் பெரும் கருத்துக்களைக் கொடுத்த இறைவன் அக்கருத்துக்களை நம் வாழ்க்கையில் கொண்டு செலுத்துதற்கு வேண்டிய ஆற்றலை நமக்கு அளிப்பாராக.

—தர்ம சக்கரம்.

## முருக பக்தர் மறைவு

தன்னலமற்ற சமூகத் தொண்டரும் சைவப் பெரியாருமாகிய இளைப்பாறிய மாவட்ட உயர் நீதிபதி திரு. ஸ்பென்சர் இராசரத்தினம் அவர்கள் அதிர்ச்சி தரும் முறையில் கதிர்காமக் கந்தன் சந்நிதானத்தில் சிவபதம் அடைந்த செய்தி சைவப் பொது மக்களுக்கு ஓர் இழப்பாகும்.

திரு. இராசரத்தினம் அவர்கள் தனது வாழ்க்கை பூராவும் சமயப்பணிக்கென்று அர்ப்பணித்த பெரியார். நல்லூர் கந்தசாமி கோயிலுக்கு அரும்பணி புரிந்த இவர் இரத்தினபுரியிலுள்ள சிவாலயத்தை நிறுவுவதற்கும் பேருபகாரியாயிருந்தார்.

கதிர்காமக் கந்தன் மீது பேரன்பு பூண்ட இவர் தமது வாழ் நாட்களில் பெரும்பகுதியான காலத்தை கதிர்காமக் கந்தன் சந்நிதியிலேயே கழித்துள்ளார்.

மாவட்ட நீதிபதியாக பல இடங்களில் கடமையாற்றிய பொழுது அவ்வப் பகுதி மக்களின் அன்பையும் மதிப்பையும் அமோகமாகப் பெற்றார். ஏனையவர்களைப் போன்று பதவியிலிருந்து இளைப்பாறியதும் மீண்டும் சட்டத் துறையுள் நுழையாது, தனது முழு நேரத்தையும் சமயப்பணிக்கே அர்ப்பணித்தார். இவர், கதிர்காமத்தில் ஒரு கர்மயோகியைப் போன்று துறவு வாழ்க்கை வாழ்ந்து வந்தார். இவரின் எளிய வாழ்க்கையைக் கண்ட யாரும் இவர் ஒரு மாவட்ட நீதிபதியாகக் கடமையாற்றியவர் என்று கூறினால் நம்பமாட்டார்கள். அத்தனை எளிமை.

1958-ம் ஆண்டு நாட்டில் நடைபெற்ற இனக் கலவரத்தின்போது பாணந்துறையில் 'பௌத்த நடவடிக்கை'யின் பயனாக கந்தசுவாமி கோயில் இடிக்கப்பட்டு, கோயில் பூசகர் உயிருடன் தீ மூட்டப்பட்டார். இந்த நிகழ்ச்சி அப் பெரியாருக்கு ஆறுத்துயரை அளித்தது. அவரது விடா முயற்சியினால், ஒரு சில மாதங்களிலேயே அக்கோயில் புனருத்தாரணம் செய்யப்பட்டது. அக் கோயிலுக்கு ஒரு ஆறுமுகசுவாமி திருவுருவமும் செய்வித்துதவினார்.

இவர் சைவத் தொண்டனாக, முருக பக்தராகவே வாழ்ந்து முருகன் பள்ளி கொண்டிருக்கும் புண்ணிய தலத்திலேயே வாழ்வை முடித்தும் கொண்டார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய நாமும் இறைவனை இறைஞ்சுவோமாக.

## தமிழை வெறுக்கும் தமிழ் பிரமுகர்

யாழ் மாநகரசபை தமிழில் காரியமாற்றுவதை ஆட்சேபித்தும், பெப்ரவரி 4-ம் திகதி கறுப்புக்கொடி பறக்கவிடப்பட்டது சட்டவிரோதமானது என்றும் சபையின் முன்னாள் தலைவராயிருந்த திரு. சி. பொன்னம்பலம் ஆட்சேபக் குரல் எழுப்பியுள்ளார்.

தமது ஆட்சேபனையில், தாம் ஒரு ஆங்கிலம் பேசும் வம்சாவளிப் பிரஜை என்றும், தம்முடன் மாநகரசபை வைத்துக்கொள்ளும் தொடர்பு அனைத்தும் ஆங்கிலத்தில்மட்டுமே இருக்கவேண்டுமென்று வற்புறுத்தியிருக்கிறார்.

யாழ். மாநகரசபை தொடர்ந்து தமிழில் தன்னுடன் தொடர்பு கொள்ளுமானால், சபையைக் கலைத்துவிட்டு ஓர் விசேட ஆணையாளரைக் கொண்டு நிர்வாகத்தை நடத்தும்படி தாம் கிளர்ச்சி செய்யப் போவதாகவும் அவர் தெரிவித்திருப்பதாக அறிகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
SUTANTIRAN

1964 மார்ச் மாதம் 29-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.
தொலை பேசி எண் : 3411 த. பெ. 1183

# தோட்டப் பிள்ளைகளின் கல்விப் பிரச்சினை

தோட்டப் பிள்ளைகளின் கல்வித் தரத்தை உயர்த்த இலங்கைத் தொழிலாளர் கழகம் பெரும் முயற்சி செய்கிறது. தோட்டப் பாடசாலைகளில் 8ம் படிவம் வரை கல்வி புகட்டுவதற்கான ஏற்பாடுகளை உடனடியாகச் செய்யுமாறு தோட்டத் துரைமார் சங்கத்தைக் கழகம் வற்புறுத்தியுள்ளது.

இன்று தோட்டப் பாடசாலைகள் அனைத்தும் ஆரம்பப் பாடசாலைகளே. 5ம் படிவத்துக்குமேல் படிக்க அங்கே வசதிகள் கிடையா. அத்துடன், தோட்ட ஆரம்பப் பாடசாலைகளின் தரம் இதர ஆரம்பப் பாடசாலைகளிலும் மிகவும் குறைவு. சுமார் இரண்டுமணி நேரம்தான் படிப்பு. ஆசிரியர்கள் பற்றாக்குறை வேறு. பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் இப்பாடசாலைகளுக்கு நியமிக்கப்படுவதில்லை. இந்த நிலையில் அவை இன்று ஆரம்ப பாடசாலைகளாயிருப்பதும் பெயரளவில்தான்.

மலைநாட்டுத் தமிழ் பிள்ளைகளுக்குப் போதிய கல்வி அறிவூட்டும் பணியில் இதுவரை எந்த மலைநாட்டுத் தலைவரும் அக்கறை எடுத்துக்கொள்ளவில்லை. தொழிற் சங்கங்களோ தோட்டப் பிள்ளைகளின் கல்விப் பிரச்சினையை அடியோடு புறக்கணித்து வந்துள்ளன.

1938 தொடக்கம் தோட்டப் பகுதிகளில் தொழிற் சங்க இயக்கங்கள் துரிதமாக முன்னேறத் தொடங்கின. இடதுசாரிச் சங்கங்கள் வர்க்கப்போரைக் கற்பித்து வர்க்க உணர்ச்சியைப் பெருக்க முயன்றன. ஆயினும் காங்கிரஸ் தொழிற்சங்கங்கள் தோட்டமக்களின் 'ஏகப் பிரதிநிதித்துவ' ஸ்தாபனங்களாக வளர்ந்து அதன், தலைவர்கள் ஆயுட்காலத் தனிப்பெருந் தலைவர்களாக மாறினர்.

அவர்களும் அவர்களின் ஸ்தாபனங்களும் சிற்சில பொருளாதாரச் சலுகைகளைப் பெற்றுக்கொடுக்க முயற்சி செய்வதோடு தங்கள் பணியை நிறுத்திக்கொண்டனர். அரசியல் உரிமைகளைப் பெற்றுக்கொடுப்பதில் அவர்கள் அக்கறைகாட்டவில்லை. எதிர்கால சந்ததியினரான தோட்டச் சிறுவர்களுக்குப் போதிய கல்வி அறிவூட்டவேண்டும் என்பதில்-அன்றுமட்டுமென்ன, இன்றுகூட-அவர்களுக்கு இம்மியளவும் சிரத்தை கிடையாது. ஏன்?

'தோட்டத் தொழிலாளிக்குக் கல்வி அறிவு தேவையில்லை. அவர்கள் 'வாயில்லாப் பூச்சிகள்'. என்றென்றும் அவர்கள் அப்படியே இருக்கவேண்டும். கல்வி அறிவூட்டப்பட்டால் தோட்ட முதலாளிகளின் பொருளாதாரச் சுரண்டலுக்குமட்டுமின்றி, இத் தொழிற்சங்கத் தலைவர்களின் அரசியற் சுரண்டலுக்கும் ஆபத்து வந்துவிடும். வளரும் சிறுவர்கள் போதிய கல்வி அறிவுபெற்றுவிட்டாலோ, 'தோட்டத் தமிழர்கள் வெறும் பூச்சிகளல்ல—அவர்களும் மனிதர்களே, அவர்களுக்கும் மனித உரிமைகள் உண்டு' என்பதை உணர்ந்து விடுவார்கள் உரிமைகளுக்காக இறுதி வரை விடாப்பிடியாகப் போராடக் கிளம்பிவிடுவார்கள். அதனால் தங்கள் தலைமை செல்வாக்கிழந்து சிதறுண்டு போய்விடும்' என்ற உண்மையைத் தெளிவாக உணர்ந்துள்ளனர் இத் தலைவர்கள்.

இந்த நிலை ஏற்படுவதைக் காங்கிரஸ் தலைவர்கள் வெறுக்கின்றனர். இடதுசாரித் தொழிற் சங்கத் தலைவர்களும் விரும்பவில்லை. தோட்ட மக்கள் அறியாமை இருளில் மூழ்கிக்கிடக்கும் வரை தங்களின் சொகுசான தலைமைக்கு ஆபத்தில்லை என்பது அவர்களின் துணிபு.

ஆகவே அவர்கள் தோட்டப் பிள்ளைகளின் கல்வித் தரத்தை உயர்த்த முயற்சி செய்யவில்லை. 5ம் படிவத்துக்கு மேல் படிக்க வசதி செய்து கொடுக்கவில்லை. நகரங்களில் உயர்தரக் கல்லூரிகளில் தோட்டப் பிள்ளைகளின் மேற்படிப்பிற்கான ஏற்பாடுகளைச் செய்ய முன்வரவில்லை. தோட்டப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் படி தோட்ட நிர்வாகத்தை நிர்ப்பந்திக்கவில்லை. பயிற்றப்பட்ட ஆசிரியர்களை நியமனம் செய்து 8ம் படிவம் வரையேனும் படிக்கும் வாய்ப்பைப் பெற்றுக் கொடுக்கவில்லை. நகரப் பாடசாலைகள் தோட்டப் பிள்ளைகளை அனுமதிக்க மறுத்த போது, அந்த அநீதியை எதிர்த்து அவர்கள் போராடவில்லை.

சுருங்கக் கூறின், காங்கிரஸ் தலைவர்களும், இடதுசாரித் தொழிற்சங்கவாதிகளும் தோட்டத் தமிழ்ச் சிறுவர்களின் கல்வி அபிவிருத்திக்காக இதுவரை சுண்டு விரலைக் கூட உயர்த்தவில்லை. அதற்காக அவர்கள் வருங்காலத்திலும் பாடுபட மாட்டார்கள்.

இந்நிலை நீடித்தால், தமிழ்ப் பிள்ளைகள் சிங்களம் படிக்க வேண்டிய நிர்ப்பந்த நிலைதான் தோன்றும். தேசியக் கல்வித் திட்ட வெள்ளை அறிக்கையும் தோட்டப் பிள்ளைகளுக்குச் சிங்களத்தைப் போதிக்க வழி வகுத்துள்ளது. பாராளுமன்றத்திலே விவாதிக்கப்படாமலே வெள்ளை அறிக்கையின் சில பகுதிகளை அமுலாக்க இடமுண்டு.

தோட்டப் பிள்ளைகளின் தொண்டைக்குள் சிங்களத்தைத் திணிப்பதைக் காங்கிரஸ் தலைவர்களும், இடதுசாரிகளும் வரவேற்பார்களென்பதில் ஐயமில்லை.

அந்தத் தலைவர்களின் நலனை முன்னிட்டுத் தோட்ட மக்களின் அறிவுக்கு அணை போட அனுமதிக்க முடியாது. இலங்கைத் தொழிலாளர் கழகம் மலையக மக்களின் அறிவுக் கண்ணைத் திறந்துவிட எல்லா முயற்சிகளையும் செய்ய முன் வந்துள்ளது.

மலையகத்தின் எதிர்காலச் சந்ததியினர் அரசியல் அறிவு பெற்று, உரிமை உணர்வு கொண்டு, தொழிற் சங்க நடவடிக்கைகளை உணர்ந்து, மனித உரிமைகளுடன் இந் நாட்டில் தலை நிமிர்ந்து வாழவேண்டும். அவர்கள் போதிய கல்வி அறிவு பெற வேண்டும்.

எனவே தோட்டச் சிறுவர்களின் கல்வி அபிவிருத்திக்காகப் பாடுபடுவதென உறுதிபூண்டு நடவடிக்கையில் இ. தொ. கழகம் இறங்கியுள்ளது. அதற்காகக் கழகம் ஒரு போராட்டத்தையே நடத்த வேண்டிய நிலைமையும் உருவாகலாம். [illegible] அனைவரும் தங்களின் கல்விப் பிரச்சினையைத் தீர்க்க ஒன்று திரள வேண்டிய வேளை வந்துவிட்டது.

# டிகாலின் புதிய ராஜதந்திரம் பலன் தருமா?

பிரான்சின் அதிபர் டிகால் "இராணுவத்தின் எதிர்காலம்" என்ற நூலின் ஆசிரியர் என்பது, அவர் கம்யூனிஸ்ட் சீனவை அங்கீகரிக்க முன் வந்திருப்பதிலிருந்து புலனாகிறது. 1943ல் பிரசுரிக்கப்பட்ட அந்த நூல், ஏராளமான டாங்கிகளையும் விமானங்களையும் கொண்டு யுத்தம் புரியும் "பிளிட்ஸ் கிரேக்" முறையை முதல் தடவையாக விளக்கி எழுதியவர்.

இத்தகைய முறையை பிரெஞ்சுத் தளபதிகள் பொருட்படுத்தாமற் போனதும், ஜெர்மன் இராணுவத் தலைவர்கள் அந்த நுட்பத்தை ஊன்றிப் படித்து இரண்டாவது உலகப் போரில் பிரான்சுக்குப் பயங்கரமான முறையில் அடி கொடுத்ததும் உலகம் நன்கு அறியும்.

பிரான்சின் பழம் பெருமையை "பிளிட்ஸ் கிரேக்" ராஜதந்திர முறைகளில் மீண்டும் நிலை நாட்டுவதில் டிகால் இப்போது முனைந்திருக்கிறார். உலகில் நிலவும் கெடுபிடி யுத்த சூழ்நிலைகளைப் பிரான்சுக்குச் சாதகமாகப் பயன்படுத்துவது அவரது குறிக்கோளாகும். அத்தகைய சூழ்நிலைகளில் சில: ரஷ்யா-சீனா சொற்போராட்டம், 1962 அக்டோபரிலிருந்து ரஷ்யா-அமெரிக்கா அணு உடன்பாடு-ஐரோப்பிய நாடுகளைக் கொண்ட கூட்டணி அமைப்பது-அபிவிருத்திக்கான உதவிகளைப் பெறுவதில் அரசியல் மேலாதிக்கத்தை அமெரிக்காவும், ரஷியாவும் ஒரு நிபந்தனையாகப் புகுத்துவதை எதிர்ப்பதென்று மண்டலச் சார்பற்ற நாடுகள் முடிவு செய்திருப்பது ஆகியவையாகும்.

டிகாலின் ராஜதந்திரம் 19-வது நூற்றாண்டின் பாணியைக் கொண்டது. ஜெனரல் டிகாலுக்கு இரு குறிக்கோள்கள் இருக்கவேண்டும். உலக விவகாரங்களில் மூன்றாவது வல்லரசாக ஐரோப்பாவில் பிரான்சுக்கு அரசியல் மேலாதிக்கத்தை ஏற்படுத்துதல், உலக ரீதியில் சிறு நாடுகளுக்கு உதவியளித்தல். பிரான்சின் நாட்டம், ஜெனரல் டிகாலின் அண்மைய மத்திய கிழக்கு விஜயத்தின் மூலம் உணரப்பட்டது. தென்னமெரிக்காவுக்குச் செல்ல விரும்பதும், தூரகிழக்கில் ராஜதந்திர நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதும் அதற்குத் தக்க சான்றுகளாகும்.

பிரான்சுக்கும் கம்யூனிஸ்ட் சீனாவுக்கும் இடையே கொள்கை வேறுபாடுகள் இருந்த போதிலும், இரு நாடுகளுக்குமிடையே ஒருமைப்பாடுகளும் நிலவுகின்றன.

ஐரோப்பாவில் ஆதிக்கம் செலுத்த விரும்புகிறது பிரான்ஸ்-ஆசியாவைத் தனது கைக்குள் வைக்க விரும்புகிறது சீனா. கெடுபிடி நிலைமைகளைத் தங்கள் நலன்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்த இரு நாடுகளுமே முயற்சிக்கின்றன.

இருநாடுகளும் சொந்த அணு ஆற்றலைப் பெருக்கிக் கொள்ள விரும்புகின்றன. இரு நாடுகளும் சிறிய நாடுகளைத் தங்கள் வலைக்குள் இழுக்க விழைகின்றன.

பிரான்ஸ் அங்கீகாரத்தினால் கம்யூனிஸ்ட் சீனா அடையும் உடனடி நன்மைகளில் ஐக்கிய நாடுகள் மன்றத்தில் ஒரு நாற்காலி கிடைக்க உறுதி கிடைக்கும்-பிரான்சும் அதன் பழைய ஆப்பிரிக்கக் காலனிகளும் ஆதரவளிப்பதாக உறுதி கூறிவிட்டன. பிரான்சின் அங்கீகாரத்தால் இதர நாடுகளும் சீனாவை அங்கீகரிப்பது குறித்து ஆலோசிக்கத் தொடங்கி உள்ளன.

பிரான்ஸ் அடையும் நன்மை மிகச் சொற்பமே-சீனாவுடன் உள்ள வர்த்தகம் அதிகரிக்கலாம்.

டாங்கிப் படைத்தளபதியான டிகால் இராணுவபலத்தின் உச்சவரம்பைப் பற்றிய கோட்பாட்டின் தத்துவத்தை விரைவில் தெரிந்து கொள்வார். அதாவது, டாங்கிகளைக் கொண்டு நாட்டைப் பிடித்துவிடலாம்-ஆனால் அதனைப் பாதுகாத்து வர ரோந்துக் காலாட் படையினர் வேண்டும். அதிபர் டிகால், எதிர்ப்புறத்தில் ஆக்கிரமிப்புப் போக்கு விரிவடைவதைக் குறைப்பதற்குத் தேவைப்படும் காலாட் படையினரைப் பெற முடியுமா என்பது பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

(ஐ. எப். எஸ்.)

## தேசியபொருள் விற்பனை

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் உள்ள கைத்தொழில் உற்பத்திப் பொருட்களைச் சேகரித்து 'நங்கையர் பணிக்குழு'வினர் ஒரு தேசிய பொருள் விற்பனையை, 28-3-64 சனிக்கிழமை பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடாத்துதற்கு ஏற்பாடு செய்துள்ளனர்.

விற்பனையை அமெரிக்கத் தூதுவராலயத்தைச்சேர்ந்த சிமாட்டி லஸ்கின் ஆரம்பித்துவைப்பார்.

# கிண்ணியா பகுதியில் ஆசிரியர்கள் இடமாற்றம்

## மூதூர் எம். பி. அறிக்கை

கிண்ணியா வட்டார ஆசிரியர்கள் இடமாற்றம் சம்பந்தமாக உண்மை நிலையைத் தெளிவுபடுத்தி மூதூர்த் தொகுதி முதல் உறுப்பினர் ஜனாப் எம். ஈ. எச் முகமதலி அவர்கள் பின்வரும் அறிக்கையை வெளியிட்டுள்ளார்கள்:

"கிண்ணியா வட்டார ஆசிரியர்களின் இடமாற்றம் இரத்துச் செய்யப்படவில்லை' என்ற தலைப்பின் 21-3-64ந் திகதி தமிழ் தினசரி ஒன்றில் கொழும்பு நிருபர் கொடுத்திருந்த செய்தியினைக் கண்ணுற்றேன். அதில் இரத்துச் செய்யப்படவில்லை ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது என்பது அடியோடு ஆதரிக்கப்பட வேண்டிய உண்மை.

நான் எந்த ஒரு நபருக்கும் எதாவதொரு விடயத்தைக் கட்டாயஞ் செய்துதருவேன் என்று வாக்குறுதி கொடுப்பதே இல்லை. இயன்ற விஷயத்தைச் செய்துகொடுக்கத் தவறுவதுமில்லை. செய்த விஷயத்தை நான்தான் செய்துமுடித்தேன் என்று தம்பட்டமடிப்பதுமில்லை. இவ்வுண்மைகளை என்னைத் தெரிந்து பழகிய யாவருமறிவர். எனவே இவ்விடயத்திலும் நான் கவலைப்படவில்லை. ஆனால் இச் செய்தியால் மக்கள் என்னைத் தவறாக விளங்கிக்கொள்ள இடமேற்படும் என்ற காரணத்தால் சற்று விரிவாக உண்மைகளை வெளிப்படுத்தலாமென்று எண்ணுகிறேன்.

### இடமாற்றத்திற்கு ஆளானவர்கள்

அநியாய இடமாற்றத்திற்காளான ஆசிரியர்கள்: 1. எம். ஐ எல். பக்கீர்த்தம்பி, 2. ஏ. எம். எம். முஸ்தபா, (சிரேட்ட) 3. ஏ. எம். எஸ். ஹமீது, 4. ஏ. எம். எம். முஸ்தபா (கனிஷ்ட) 5. எஸ். ஏ. எம் சரீபு, 6. எஸ். எம். இஸ்மாயில் மௌலானா, 7. எம். எம். இபாதுல்லா மௌலவி ஆகியோராவர்.

இவ்வாசிரியர்களின் இடமாற்றம் அநீதியானதென்றுணர்ந்த பெற்றோரும், மற்றோரும், எதிர்ப்புக் கடிதங்கள் எனக்கெழுதியதோடு, கல்வி மந்திரிக்கும் கல்விக் கந்தோர் அதிகாரிகளுக்கும் தந்திகள் மூலம் எதிர்ப்புக் காட்டினர். என்னிடம் தூதுகோஷ்டிகளாகவும் வந்தவர்.

இவ்வேளையில் 29-2-64ல் திருகோணமலை வட்டார இஸ்லாமிய ஆசிரியர் சங்கப் பொதுக்கூட்டம் கூடப்பட்டு ஆசிரியர்கள் சிலரும் இவ் வநீதியான மாற்றங்களை எதிர்த்துப் பிரேரணைகள் கொண்டுவந்தனர். அக்கூட்டத்தில் நான் மந்திரியைச் சந்தித்து நடவடிக்கை எடுப்பேன் என உறுதிகூறினேன்.

பிரேரணையின் பிரதி எனக்குக் கிடைக்க தாமதமான படியால் அதை நான் காத்திராது 6-3-64ல் கல்வி மந்திரியை அவரது அலுவலகத்தில் சந்தித்து இவ் வநீதியான மாற்றங்களை எடுத்துக் கூறி நியாயம் வழங்கக் கோரினேன். அவர் நடவடிக்கை எடுப்பதாகக் கூறியும் 10ந் திகதிவரை ஒரு வித நடவடிக்கையும் எடுக்கப்படாததைக்கண்டு மீண்டும் 12-3-64ல் கல்வி மந்திரியைக் கண்டு 16-3-64ந்திகதி நெருங்கிவிட்டதாக முறையிட்டு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறுவேண்டினேன். அதன் பேரிலேயே இம்மாற்றம் ஒத்திப்போடப்பட்டது.

இந்நடவடிக்கை என் திறமையின் விளைவு என்று நான் சொல்ல முன்வரவில்லை.

(7ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதவிக் காணி அதிகாரியின் பாரபட்சம்

## தம்பலகாமம் காணிக்கச்சேரியில் நிரந்தர வாசிகளுக்கு கைவிரிப்பு

தம்பலகமம் வடக்கில் பாலம் போட்டாற்றில் உள்ள எழுநூறு ' ஏக்கர்களுக்கான காணிக் கச்சேரி தம்பலகமம் காரியாதிகாரி கந்தோரில் கடந்த இருபதாம் திகதி திருமலை மாவட்ட உதவிக் காணி அதிகாரி தலைமையில் நடைபெற்றது.

என்றுமில்லாத வகையாக தம்பலகமத்தில் வாழும் தமிழ்பேசும் மக்கள் காணி பெற ஆயிரக்கணக்கில் வந்திருந்தனர்.

சிங்கள மக்களும் வந்து குவிந்திருந்தனர். கல்மிட்டியா குடியேற்றத்தில் அனுமதி இன்றிக் குடியேறியவர்களும் மற்றும் பல இடங்களில் தற்காலிகமாகக் குடியிருக்கும் சிங்கள மக்களும் கொடுத்த விண்ணப்ப மனுக்களைக் காணி அதிகாரி எவ்வித பேச்சும் இன்றி ஏற்றுக்கொண்டதுடன் தம்பலகமம் தெற்கு மக்களுக்கு இந்த நிலப்பங்கீட்டில்காணி வழங்கப்பட மாட்டாதென்றும் தம்பலகமம்வடக்கு மக்களும் இதர கிராமவாசிகளுமே இந்தக் காணி வினியோகத்தில் இடம்பெறுவார்கள் எனவும் அறிவித்தார்.

### காணி அதிகாரியிடம் நேரில் முறையீடு

இதைக் கேட்டுப் பரபரப்படைந்த தம்பலகமம் தெற்கு மக்கள், காணி அதிகாரியின் முடிவைநேரிலேயே பலமாக ஆட்சேபித்தனர்.

தம்பலகமத்தின் ஒரு பகுதியில் நடைபெறும் காணிப் பங்கீட்டில் தம்பலகமத்தின் மறு பகுதி மக்களுக்கு காணி வழங்க மறுப்பது பெரும் அநீதியென தெற்கு மக்கள் காணியதிகாரியிடம் நேரிலேயே எடுத்துக் கூறினர். அதற்கு தம்பலகமம் வடக்கு மக்களுக்கும் குறிப்பிட்ட இதர கிராமவாசிகளுக்கும் தான் இந்தக் காணிக்கச்சேரியெனத் தாம் ஏற்கனவே அறிவித்துள்ளதாகக் காணி அதிகாரி நோட்டீசொன்றைக் காட்டினார்.

தம்பலகமம் தெற்குக்கு இந்தக்காணிப் பங்கீட்டில் இடமில்லையானால் தம்பலகமம் தெற்கு கிராமச் சேவையாளரின் பகுதியான கல்மிட்டியாக் குடியேற்றத்தில் தற்காலிகமாக வசிக்கும் சிங்கள மக்களின் விண்ணப்பங்களை ஏற்றுக்கொண்டதின் காரணமென்னஎன்று தெற்கு மக்கள் காணி அதிகாரியிடம் மீண்டும் வினவினர்.

இக் கேள்விக்கு பதிலளியாமல் நீண்டநேரமாக மௌனம் சாதித்த காணி அதிகாரி ஒன்றரை மாதத்தின் பின் தெற்கு மக்களுக்கும் காணி கிடைக்க வகை செய்வதாகக் கூறினார். தங்களுக்கு இழைக்கப்பட்டுள்ள அநீதியை தெற்குமக்கள் பதிவுத் தபால்மூலம் திருகோணமலை அரசாங்க அதிபருக்குத் தெரிவித்திருப்பதுடன் தமிழரசுத் தந்தை திரு. செல்வநாயகம், மூதூர் எம். பி. கள் போன்றோருக்கும் தந்திமூலம் அறிவித்துள்ளனர்.

### காணிப்பங்கீட்டை ரத்துசெய்க

தம்பலகமம் கிராமச் சபைத் தலைவர் திரு. சு. வேலுப்பிள்ளை திருமலை அரசாங்க அதிபர், பிரதமகாணிக் கமிஷனர் போன்றோர்களுக்கு அனுப்பி உள்ள தந்தியில் 20ம் திகதி நடைபெற்ற காணிக் கச்சேரியில் பாரபட்சம் காட்டப்பட்டுள்ளதால் அதை உடனே ரத்துச்செய்யுமாறும் ஸ்தல பூர்வீகக்குடிகளுக்குக் காணி கிடைக்கத் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் கோரியுள்ளார்.

## கூட்டு மேதினம்.....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யர் சங்கம், தமிழ் ஆசிரியர் சங்கங்கள், கூட்டுறவு ஊழியர் சங்கங்கள், வர்த்தக ஊழியர் சங்கங்கள், மற்றும் இதர தனியார் துறையில் உள்ள சங்கங்கள் அனைத்தும் கொண்ட கூட்டு மேதினமாக மூன்று இடங்களிலும் நடைபெறும்.

தமிழ்ப் பிரதேசங்களிலும் ஏனைய இடங்களிலும் உள்ள கலாச்சார இயக்கங்களையும் மேதின விழாவில் கலந்து கொள்ளும் வண்ணம் எழுதுவினைஞர் சங்கம் அழைப்பு விடும் என்று அறியப்படுகிறது.

மேதினத்திற்கு முன்னர் மொழிவழித் தொழிற் சங்கங்களின் சம்மேளனம் அமைக்கப்பட்டுவிடும் என்றும் அறியப்படுகிறது. "இவ்வாண்டின் மே தினம் தமிழ் பேசும் தொழிலாளர்களின் எதிர்கால் விடுதலைக்கு மொழி வழித் தொழிற் சங்கங்கள் கூட்டாக எடுக்கப் போகும்நடவடிக்கைகளுக்கு முன்னோடியாக விளங்கும்" என்று தமிழ் ஊழியர் ஒருவர் நமது நிருபரிடம் கூறியுள்ளார்.

### இ. தொ. கழகம்

இலங்கைத் தொழிலாளர் கழகம் அட்டன் நகரில் மே தினத்தைக் கொண்டாடுவதற்கு வேண்டிய ஒழுங்குகளை மேற்கொண்டு வருகிறது. அட்டன் நகரில் நடைபெறும் இவ்விழாவில் மொழி வழித் தொழிற் சங்கப் பிரமுகர்கள் உட்பட தமிழரசுக் கட்சித் [illegible] வர்களும் கலந்து [illegible] வார்கள் என்று தெரிகிறது.

## கிண்ணியா ......

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

அநீதி நிலைக்காது, உண்மை வெல்லும் என்றஅடிப்படையில் இறைவன் கல்வி மந்திரியின் இதயத்தைக் கனியச் செய்தான், என்றே நான் கருதுகிறேன், நம்புகிறேன்.

ஒத்திவைக்கப்பட்ட மாற்றங்களை அடியோடுஇரத்துச் செய்யுமாறு கல்விமந்திரியைக்கேட்டவண்ணமாகவே இருக்கின்றேன்.

மூதூர்த் தொகுதிக்கு இறைவன் உதவியால் இரு பிரதிநிதிகள் இருக்கின்றனர். அவ்விருவரும் ஒரே ஊரைச்சேர்ந்தவர்கள்; முஸ்லிம்கள்.

என்னைப் பொறுத்தவரை சகல இனத்தினருக்கும் பாரபட்சமற்ற முறையில் இதுவரை என்னாலான கடமைகளைச் செய்து வந்திருக்கின்றேன். இனியும் தொடர்ந்து செய்வேன்.

## கட்டாய........

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தமது பெரும்பான்மை அங்கத்தவரின் உண்மையான வகுப்புவாத மனப்பான்மையைக் காட்டிய போது, பொதுச் சேவையில் தமிழ் அரசாங்க ஊழியர் தமது உரிமைகளைப் பேணிக் காக்கவும், தமிழ் பேசும் மக்களின் உரிமையை நிலைநாட்டி அதன் மூலம் வருங்காலத் தமிழ் பேசும் சந்ததியினருக்கு உறுதியான சுதந்திர வாழ்வைப் பெற்றுத் தர நடைபெறும் போராட்டத்திற்குத் தமது பங்கைச் செலுத்தவுமே, அரசாங்க எழுது வினைஞர் சங்கம் உருவாக்கப்பட்டது. தமிழ் பேசும் தொழிலாளரின் சமேற்றத்துக்காக அயராது, உற்சாகத்துடன் போராடி வருவதுடன், தமிழ் பேசும் தொழிலாளரிடையே நிலவும் மொழிவாரியான தொழிற்சங்கங்களுக்கு உருவமும் அமைப்பும் உயிரும் அளித்து வருகின்றது என்று தாழ்மையுடன் உரிமை கொண்டாடுவதில் பெருமைப்படுகிறது. சங்கம்.

நாம் 31-12-63க்குப் பின் வரும் சேவையில் தொடர்ந்திருப்பது என்று தீர்மானித்தோம். எங்கள் வருங்காலத்தை உணர்ந்து, நீதி, நியாயம், வாக்குறுதி இவற்றுக்கு மதிப்பளிக்காத எமது எஜமானர் எம்மை வேலையிலிருந்தும் எந்த நேரமும் நீக்கி மனத் திருப்தியடைய முடியும் என்பதை உணர்ந்தே, அத் தீர்மானத்தைச் செய்தோம்.

இதே உணர்ச்சிவசப்பட்ட மனப்பான்மையிலேயே நாம் இப்பொழுது அரசாங்கம் தந்துள்ள இரண்டு வருட இடைக்காலச் சலுகையை உதாசீனம் செய்துள்ளோம். அரசாங்க ஊழியர்கள் சேவையில் தொடர்ந்து இருக்க, சிங்களத்தில் போதிய தேர்ச்சி பெற வேண்டுமென்ற அரசாங்கத்தின் வலுக்கட்டாயத்தைத்தொடர்ந்து எதிர்த்தே தீருவோம் என்பதையும்வலியுறுத்த விரும்புகிறோம்.

தொழில் இழப்பின் மூலம் ஏற்படும் எமது கஷ்டம், எமது சமூகத்திற்கு நன்மை பயக்குமெனில், பொது நன்மையை வேண்டாத மனிதர் யாருளர்?

தமிழ் நலனுக்காகத் தியாகம் செய்தவர்களின் முதல் வரிசையில் இருப்பதற்குச் சந்தர்ப்பம் கிடைக்குமெனில் அதுவே எமக்கு அளப்பரிய பெருமிதத்தை அளிக்கும்.

அரசாங்கத்தின் தளையிலிருந்து விடுபட்டு, தமிழ் பேசும் சமூகத்தின் அங்கத்தவர்களாக நிற்கும் எமக்கு எதிர்காலத்தில் பல போராட்டங்கள் தோன்றக்கூடும். இச்சந்தர்ப்பத்தில், சேவை முடிவுகாலத்துக்கு முன்னரே சேவையிலிருந்து விலகிய எமது தோழர்களுக்கு நாம் நன்றி செலுத்த விரும்புகிறோம். சேவையில் தொடர்ந்து இருப்போருக்கு, மொழிவழி தொழிற் சங்க இயக்கத்தையும், பொதுச் சேவையில் நாம் போராடி [illegible] கொள்ள விரும்புகிறோம்.

## தமிழ்.............

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

### கோரிக்கைகள்

ஆசிரியர் சங்கம் விடுத்துள்ள 11 அம்சக் கோரிக்கைகளும் பின்வருமாறு:-

மொழி வேறுபாடின்றி சம சம்பளம் வழங்குதல், அரசாங்க ஊழியர் போன்று பென்ஷன் வழங்குதல், அரசியல் உரிமை கொடுத்தல், ஆசிரிய சங்கப் பிரதிநிதிகளைக் கொண்ட இடமாற்றசபை அமைத்தல், தேசியக் கல்விச்சபைச் சிபார்சுகளை அமுலாக்குதல், பதவியுயர்ச்சி வழங்கல், விசாரணைசபை அமைத்தல், தமிழ்ப்பாடசாலைகளைத் துடனும் தமிழில் தொடர்பு கொள்ளுதல், சம்பள முரண்பாட்டுக்கமிஷனின் அநியாயத்தை நீக்குதல், ஆசிரியர்களுக்கு 2-ம் 3-ம் தர பதவி, வித்தியாதரிசி பதவி முதலிய உயர்த்துதல்ஆகியவையே மேற்படி பதினொரு அம்சக்கோரிக்கைகளாகும்.

எமது போராட்டக்களம், இப்பொழுது வேறிடத்தை—எமது பரம்பரைத் தாயகத்தில் உள்ள ஒவ்வொரு இல்லத்திற்கும், தோட்டத்திற்கும்—நோக்கித் திரும்புகிறது. அத்துடன், இப் போராட்டத்தில், ஒரு புனித இலட்சியத்துக்காகச் செய்யப்படும் ஆகக்கூடிய தியாகத்தையும் செய்ய நாம் தயங்காதிருப்போமாக. இந்த நாட்டுக்கும், வெளியுலகிற்கும், எந்த ஒரு மொழிக்கும், கலாச்சாரத்திற்கும் பின்னிற்காத மொழிக்கும், கலாச்சாரத்திற்கும் வாரிசுகள் நாம் என்பதை அறிவுறுத்துவோமாக.

## யோக சுவாமிகள் மறைவு

யாழ்ப்பாணம் கொழும்புத் துறையிலிருந்து ஞான ஒளிபரப்பிய ஆத்மீகத் துறைவி யோக சுவாமிகள் செவ்வாய்க் கிழமை அதிகாலையில் இறைவனடி சேர்ந்தார் என்ற செய்தி கேட்டு பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் கலங்கினர். யாழ்ப்பாணம் நகரமே சோகக் கடலில் மூழ்கியது.

புதன்கிழமை காலையில் கொழும்புத்துறை மயானத்தில் நடைபெற்ற யோக சுவாமிகளின் ஈமக் கிரியைகளில் இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர்.

## ம. மூ. தெ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தில் நின்ற அவரின் ஆதரவாளர்கள் தமிழரசுக்கட்சி சின்னம்-கட்சியினரின் அனுமதி இன்றித் தரமாட்டார்கள்-என்று சொன்னதும்--தனது அறியாமைக்கு வருந்திய காட்சி-மிகமிக ருசிகரமாக இருந்தது.

தமிழரசுக்கட்சித் தலைவருடன் திருமதி வ. வில்லியம் சிங்கோ-போட்டி போடுகிறார். மொத்தத்தில் அத்தேர்தல் முடிவே பட்டிருப்புத் தொகுதியின் தேர்தலை நிருணயிக்கும் பலப் பரீட்சையாகும். இதில் கட்சி வெல்வது சுலபமானது.


## இன்றே எழுதுங்கள்

எந்த விதமான மனக் கவலைகளோ, வாழ்க்கையில் நிறைவேற வேண்டிய காரியங்களோ இருப்பின் அவைகளை விபரமாக எழுதி அனுப்புங்கள். தெய்வ பலத்தினாலும், மந்திர சக்தியினாலும் உங்கள் காரியங்களை நிவர்த்தி செய்து தர முடியும். இரகசியங்கள் வெளியிடப்பட மாட்டாது.

கவர்மெண்ட் ரிஜிஸ்டர் மாந்திரீக வைத்தியர்


பி. எம். திசாநாயக்க

தாலு தேவாலய பிரதம தர்மகர்த்தா

அருத எண்ணெய் தலைமை காரியாலயம்

கம்பளை.





## ரிஷி லேகியம்

ரிஷி கருணைக் கிழங்கு லேகியம்

ரிஷி படம் உள்ளதாவெனப் பார்த்து வாங்கவும்

மலச்சிக்கலுக்கும், மூலவியாதிக்கும்

மூல முளைகள், இரத்த மூலம், சீழ் மூலம், வெளி மூலம், உள் மூலம், பௌத்திர கை கால் அசதி, சோம்பல், அஜீரணம், பசியின்மை, பத்தவாயு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், இடுப்பு வலி, நெஞ்சுவலி, புற்றுகள், கண்கை சால், திரேக எரிச்சல், தேக மெலிவு, மூலச் சூட்டினால் உண்டாகும் எல்லா வியாதிகளையும் உடனே கண்டிக்கும்.

விபரமடங்கிய கேட்லாக் இனும்

15 நாள் டின் ரூபா 3-00

30 நாள் டின் ரூபா 5-75


தபால் செலவு /-95

ஞானசுந்தர வைத்தியசாலை,

187, செட்டியார் தெரு, கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதியவன்



உடலிலோ வெயில் புழுக்கம்; உள்ளத்திலோ வேதனைப் புழுக்கம். இந்த இரு புழுக்கங்களையும் தன்னடக்கிய என்னுடலைச் சுமந்துகொண்டிருந்தது அந்தச் சாய்மனை. நீட்டிய சடடங்களில் காலைப் பின்னிப் போட்டுக்கொண்டு, உள்ளிழுத்த சிகரட் புகையை வெளியே தள்ளிக்கொண்டிருந்தேன். 'வட்டம் வட்ட'மாக, 'சுருள் சுருளா'க மேலெழுந்து செல்லும் அந்தப் புகை நெளிவுகளில், மனதிற்கு அமைதிதரும் ஏதோ ஒன்றைத் தேடிக்கொண்டிருந்தேன்.

'அமைதி'. நான் 'கிட்டக் கிட்ட' செல்கிறேன். அது 'எட்ட எட்ட' விலகிச் செல்கிறது.

தவறுதல் மனித இயல்பு. மேலும் தவறு செய்யாமல் பார்த்துக்கொள்வது மனித அறிவு. செய்த தவறை உணர்ந்து திருந்தி வாழ வேண்டும். அருமையான வாக்கியம். இதைத் தெரிந்தும் தவறினேன்.

பள்ளி வாழ்க்கையிலும் சரி, பிற வாழ்விலும் சரி 'கவலை' என்றால் என்ன என்று தெரியாது வாழ்ந்த எனக்கு இது ஓர் சோதனையா? இல்லை வேதனையா? அல்ல தண்டனையா?

அது ஓர் கல்யாண வீடு. அன்றுதான் அவளைச் சந்தித்தேன். அவளை முன்பே தெரியும். ஆனால் சந்திப்பில்லை. இருவருக்கும் வேண்டியவர் வீட்டுத் திருமணம். அதனால் இருவரும் கதாபாத்திரங்களானோம். வந்த கடமைக்காக, 'ஓடி ஆடி'ப் பணியாற்றினோம். அவ்வளவுடன் அது நின்றால்தானே. அதுமேலும் தொடர்ந்தது. நினைவுக்கப்பால் சென்றது; சென்றே விட்டது.

பேசினோம்; கதைத்தோம்; சிரித்தோம்.

அவளுடைய 'குளு குளு'ப் பார்வை, 'கிளு கிளு'ப்பேச்சு 'கல கல'ச் சிரிப்பு, என்னைத் 'தளதள'க்கச் செய்தது.

ஒருவன் எத்தனையோ பெண்களைப் பார்க்கிறான், பேசுகிறான். எல்லோரோடும் அன்பாகப் பழகுகிறான். பொதுவான அன்பு சிறப்பாக யாரோ ஒருத்தியிடம் காதலாக மாறுகிறது.

அவளைக் கண்டதும் நான் காதல் கொள்ளவில்லை. எங்களுக்கிடையில் ஏற்பட்டது காதலென்றும் நான் சொல்லவில்லை. காரணம் அவள் இன்னொருவன் மனைவி அப்போ எங்களிடை இருப்பது...?

காதலோ? கத்தரிக்காயோ? எனக்குத் தெரியாது. ஆனால் ஏதோ ஒன்று இருக்கத்தான் செய்தது.

பிறன் தாரத்தை தாயெனவும், அந்நியர் மங்கையைச் சகோதரி போலவும் மதித்து நடக்க வேண்டும். பல நூல்களில் படித்திருக்கிறேன். கேட்டிருக்கிறேன். போதித்துமிருக்கிறேன். ஆனால் உணர்ச்சிக்கு அறிவு அடிமைப்படும்பொழுது, அறிவுரைகள் தடைபோட முடியுமா?

காற்றும், சூரிய வெளிச்சமும் கிடைக்கப்பெறும், பண்பட்ட நிலத்தில் விதை முளை விடுகிறது. ஆசை என்பதும் ஓர் விதை சந்தர்ப்ப சூழ்நிலையைச் சாதகமாகவைத்து அது வளர்கிறது. இதில் நாம் யேறு?

ஃ

அன்றைய சந்திப்புமுதலும் முடிவுமாக இருந்திருந்தால் எவ்வளவோ நன்றாக இருந்திருக்கும் என நான் சிந்தித்ததுண்டு. பல சந்தர்ப்பங்கள் கிடைத்தும் அதை நான் பயன்படுத்தவில்லை.

ஆனால் நான் விட்டாலும் அவள் விடுகிறவளாக இல்லையே? ஒருநாள், ஓரிடத்தில் தற்செயலாக என்னை அவள் கண்டுவிட்டாள். கண்டே விட்டாள்.

அழைத்தாள்; பேசினாள்: பேசிக்கொண்டே போனாள்.

நான் கேட்டேன்; மறுப்பில்லை; கேட்டுக்கொண்டே நின்றேன்.

ஏதேதோ பேசினாள், என்னென்னவோ சிந்தித்தேன்.

வீட்டுக்கு வரும்படி அழைத்தாள். மறுக்க முடியாமல் பின் தொடர்ந்தேன். 'பேசிப் பேசி' சென்றுகொண்டிருந்தாள். 'நடந்து நடந்து' பேசிக்கொண்டு சென்றாள். நடந்துகொண்டே கேட்டேன். முடிவு—என்ன பேசினாள் என்பது எனக்கே தெரியவில்லை. என் நெஞ்சில் அலைமோதியது 'ஒன்றே ஒன்று' தான். 'எதற்காக என்னை அழைக்கிறாள்?'

ஃ

வீடு வந்தோம். ஏதோ நடந்தது. நடந்தே விட்டது. விடைபெற்றேன்: விடை தந்தாள். விடை மட்டுமா தந்தாள். இன்னொன்றும் தந்தாள். நான் சொல்லவேமாட்டேன் எனக்கு வெட்கமாயிருக்கிறது. ஊ...ம்...ம்...



நடந்தேன். நடப்பது நானா? அல்ல மனித யந்திரமா?

சிந்தித்தேன் சிந்தித்தேன். முடிவு சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தும்படி கட்டளை வந்த தங்க முடிவைத் துக்குக் காலை வாரிவிடும் இந்தவன், கெட்டவைக்குத் துரித விரைவில் வருவதேன்?

இப்போது துணிந்து விட்டேன் சீ......துணிவா அது? ஒரு வெறி. பின் சொல்லவா வேண்டும், அவள் வீட்டில் நான்.

நிலவைக் கண்ட சந்திர காந்தக் கல் நீரைப்பொழியுமாம்.

அவளைக் கண்ட என் இதயம் கசிந்து உருகியது.

உடலிலே என்ன நடுக்கம். இப்போது குளிர்காலம் அல்லவே. உடல் தகித்தது.

பிறர் பொருளைப் பறிப்போன் இவ்வுலகிலேயே தன் வேரைக் கெல்லி எறிகிறான். அதேபோல் பிறன் மனைவியை இச்சிப்போன் போன்ற பேதமை உலகில் இல்லை. அட, புத்தரின் போதனை இந்த வேளையிலா?

வண்டு வருகின்றது. மலரில் அமர்கின்றது. உண்டு திரும்புகிறது. பெண்மையைக் காக்க வேண்டியவள், ஆண்மையைப் பேண வேண்டியவன், இருவரும் குற்றவாளிகள்.

"அகந்தையின்றி, அன்புள்ளவளாக, தாய்மைப் பண்பும், கற்பும் உடையவளாகக், கொண்ட கணவனையே தெய்வமாகப் போற்றி, போதும் என்ற மனம் பொருந்தி; மனம், வாக்குக் காயங்களினால் தூய்மையுடையவளாகப் பெண் இருக்க வேண்டும்" எனப் பெண் வர்க்கத்துக்கு மட்டுமல்ல அவளுக்கும் தான் உபதேசம் செய்தார் புத்தர்.

நடந்தது இனிமைதான். முடிந்தது வேதனை தான்.

என் மனம் ஏனோ அமைதி கொள்ளவில்லை. என் மனதைக் குடைவது என்ன? கடி எறும்பு கடித்த வேதனை உள்ளத்தில்.

எதற்கும் அவளிடம் நேரில் சென்று மன்னிப்புக் கேட்க வேண்டும் போல் எனக்குப் பட்டது.

நடை 'விறுவிறு'த்தது.

சுவை கண்ட பூனை திரும்பியிருக்கிறது என அவள் நினைத்திருக்கிறாள் போலும். நினைக்கட்டுமே. ஆனால் என் நிலை இஞ்சிச் சாற்றுடன், விளக்கெண்ணை கலந்து மருந்து குடித்தவன் மாதிரி.

'இரவு நடந்தது நடந்து விட்டது. தயவு செய்து அதை மறந்து மன்னித்து விடவும். இத்துடன் எங்கள் உறவு நின்றால் அதுவே போதும்.' என் இருதயம் 'படபட'த்தது. நா 'தட தட'த்தது. குரல் 'கரகர'த்தது. உடல் 'வியர் வியர்'த்தது. அவளிடம் அலைவு இடையா.

சர்வசாதாரணமாகப் பேசினாள்.

'நீர் 'புதிசு'. இரவுச் சம்பவம் நீர் நினைப்பது போல் பெரிய தவறல்ல. அப்படி நான் கருதவில்லை. இரவில் பயமுறுத்தும் இருள் பகலவனைக் கண்டதும் பறந்துவிடும். மறைந்துவிடும். நானே அன்றிரவு-அதே நிமிடம் மறந்துவிட்டேன். மறந்தே விட்டேன். எனக்கு நினைவில் இல்லை. இருளில் நடந்தது. ஊ...ம்...ம்...நீர் புதிசு'

எனது மண்டை ஓடு சுழன்று பறப்பதுபோல் இருந்தது. முடுக்கிவிட்ட பொம்மையைப்போல், நடந்துகொண்டிருந்தேன். நானும் எல்லாவற்றையும் மறந்துவிட்டேன், காலத்தின் சுழற்சியில். ஆனால் ஒன்று மட்டு இன்றும் என் இதயத்தில் எதிரொலித்துக் கொண்டேயிருக்கிறது. 'நீர் புதிசு.'

(யாவும் கற்பனை)

## களிறெறிந்து...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

அவன் கடமைதான் என்ன? தேசப்பற்றையும் வீர உணர்ச்சியையும், மாசறு உள்ளக்கிளர்ச்சியையும் உணர்ச்சித் துடிப்பையும், இளமை வேகத்தையும் ஈடில்லா வலிமையையும் வளர்த்துவிடுதல் அவன் கடமையன்றோ.

இவ்வளவையும் இவர்கள் எல்லாரும் செய்ய அந்த இளங்காளையின் கடமை தான் என்ன? சான்றோன் ஆக்கினான் தந்தை; வேல் வடித்துக் கொடுத்தான் கொல்லன்; வீரவுணர்ச்சி யூட்டினான் மன்னன்...அப்படியெனில் இவையாவற்றையும் ஒன்று திரட்டி களம் புகவேண்டும் அந்தக்காளை. களம் புகுந்து களிறுகளை வெட்டி வீழ்த்தி, வளம் நிறை நாட்டினை வஞ்சகரிடமிருந்து மீட்டு நலம் காண்பதே நம் காளையின் கடமை. நாட்டுக்கும்—நல்லவர் வாழ்வுக்கும் நலிவு வந்துற்ற காலை, இப்படி வீட்டுக்கு ஒரு காளை போட்டியிட்டுக் கொண்டு புறப்படவேண்டும் என்பதே அத் தமிழ்த்தாயின் எண்ணக் கருத்து. இதோ அந் நற்பாடல்...! பொன்முடியார் பாடியது.

ஈன்று புறந்தருதல்
என் தலைக் கடனே;
சான்றோ னாக்குதல்
தந்தைக்குக் கடனே;
வேல்வடித்துக் கொடுத்தல்
கொல்லற்குக் கடனே;
தண்ணடை நல்கல்
வேந்தற்குக் கடனே;
ஒளிருவா ளருஞ்சமம்
முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல்
காளைக்குக் கடனே.

புறநானூறு...312.


# வேல் தைலம்
## மிகச் சிறந்த சஞ்சீவி

ஜலதோஷம், தலைவலி, ஒருதலைக்குத்து, கை கால் உளைச்சல், முதுகு வலி, விஷக் கடி, தேள்கடி, ஜன்னி, வாய்வுப் பிடிப்புகள், சுளுக்கு, வீக்கம், இரத்தக் கட்டு, கட்டிகள், புறப்பாடுகள் முதலிய சகல வியாதிகளுக்கும் பாதிக்கப்பட்ட இடங்களில் நன்றாகத் தேய்த்தால் மிக விரைவில் குணமடையும்.

ஒவ்வொரு வீட்டிலும் இருக்க வேண்டிய
மகா சஞ்சீவி.

**விலை ரூபா 1-50**

தபால் செலவு வேறு.

தயாரிப்பாளர்கள்:

**S. P. S. ஜெயம் கம்பெனி,**
மதுரை.

இலங்கையில் சோல் ஏஜண்ட்:

**M. A. R. S. மனுவேல் நாடார் அன் கோ.,**
**34, செட்டியார் தெரு,**
கொழும்பு-11.



# "எப்படி எழுத ஆரம்பித்தேன்"

என்ற தலைப்பில்

ஈழத்து முன்னணி எழுத்தாளர்கள்
அனைவரும் பங்கு கொள்ளும்
புதிய தொடர்

## 'சுதந்திரனி'ல்

விரைவில் ஆரம்பமாகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். ராஜினுமா!

## தி. மு. க. விலிருந்தும் விலகுவாரா?

## அண்ணு வந்தால் முடிவு தெரியும்

நமது சென்னை நிருபர்

புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். பற்றிய செய்திகள் தமிழ் திரைப்பட உலகையும் அரசியல் உலகையும் சூருவளி போல் உலுக்கிக் கொண்டுள்ளன. தமிழகத்தில் மட்டுமல்லாமல் இலங்கையிலும் இச் செய்தி காட்டுத் தீ போல் பரவி வாதப் பிரதிவாதங்கள் தொடர்ந்து ஏற்பட்டுக் கொண்டேயிருககின்றன.

புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். மேல் சபை உறுப்பினர் பதவியையும், தி.மு.க பொதுக் குழு பதவியையும் இராஜினுமாச் செய்தமைக்கு, கலைச் சேவையையே முதன்மையாகக் கருதுவதாகவும், அரசியலை இரண்டாவதாகக் கணிக்கப் போவதாகவும் தான் காரணம் காட்டியுள்ளார். அண்மையில் நமது நிருபர் சென்னையிலுள்ள ஒரு படப்பிடிப்பகத்தில் எம். ஜி. ஆரைப் பேட்டி கண்ட போது அதையே தான் வலியுறுத்திக் கூறுகிருர்.

### பொற் காலம்

இன்றைய தமிழ்த் திரைப் படத்துறையை எம். ஜி. ஆருக்கு ஒரு பொற்காலம் என்று தயங்காது கூறலாம். தற்பொழுது உருவாகும் தமிழ்த் திரைப்படங்களில் எம். ஜி. ஆர். தான் அதிகமான படங்களில் நடிக்கிருர் எனக் கூறப்படுகிறது.

சில வருடங்களுக்கு முன்னர் கலைஞரான எம்.ஜி. ஆர். கலைக்காகச் செலவு செய்யும் நேரம் வெகு குறைவு என்றும், அரசியலே அவருக்குப் பெரிதாகிவிட்டது என்றும், அவரை நம்பி ஏராளமான பொருளைத் திரைப் படத் துறையில் முடக்கியவர்கள் புகாரிட்டு வந்தார்கள். எம். ஜி. ஆர். ஒப்பந்தமாகிய படங்களும் வெகுவாகக் காலந்தாழ்த்தியே திரைக்கு வந்தன. ஒப்பந்தத்தில்குறிப்பிட்டபடி ஒழுங்காக் கடமையைச் செய்வதில்லை என்ற குற்றச்சாட்டும் இருந்து வந்தது.

இக்குற்றச்சாட்டுகளையெல்லாம் எம். ஜி. ஆரின் புது வேகம் முறியடித்து விட்டமையினுல், இன்று அவருக்கு மென்மேலும் கிராக்கிகள் எழுந்துவிட்டன. மக்கள் மத்தியில் பெரும் புகழ்ச்சியும் உயர்ந்து விட்டது. இந்நிலையினை உணர்ந்துதான் எம்.ஜி.ஆர். கலைச் சேவைக்கு முதன்மை அளிக்க அரசியலை ஓரளவு கைவிடுகிருர் என்று கூறவும் இடமுண்டு.

### லட்சியம்

தி. மு. க.வின் முக்கிய தலைவர்களுள் ஒருவரான திரு. இராமச்சந்திரன், 'கழகத்திலிருந்து விலகவோ, இலட்சியங்களிலிருந்து மாறுபடவோ மாட்டேன்' என்று உறுதி கூறுகிருர். ஆனுல் தமிழக அரசியல் வானில் அடிபடும் வதந்திகளைக் கொண்டு பரிசீலனை செய்து பார்க்குமிடத்தில் தி. மு. க. தலைவர்களில்—குறிப்பாக ஒருவருடன் எம். ஜி. ஆர். மனத்தாங்கல் கொண்டிருக்கிருர் என்று ஊகிக்க முடிகிறது.



அண்மையில் நடைபெற்ற சென்னை மாநகரசபைத் தேர்தல்களின் போதுதான் குறிப்பிட்ட தி. மு. க. தலைவருக்கும், எம். ஜி. ஆருக்குமிடையில் கருத்துவேற்றுமைகள் உண்டாகியுள்ளன என்றும் தெரிகிறது. அண்ணு சிறையில் இருப்பதனுலும், சில பொறுப்புகளை மேற்குறிப்பிட்ட தலைவர் தன்னிஷ்டப்படி, சர்வாதிகார ரீதியில் ஏற்று நடப்பதனுலும், கழகத் தலைவர்களுள் பெரும் அதிருப்தி ஏற்பட்டிருப்பதாகவும் நம்பப்படுகிறது.

கவிஞர் கண்ணதாசன், ஈ. வி. கே. சம்பத் போன்ற தலைவர்களும்தி. மு. க விலிருந்து வெளியேற மேற்படி தலைவரே காரண கர்த்தா என்றும் வதந்திகள் அடிபடுகின்றன.

### அண்ணு வந்ததும்...

அறிஞர் அண்ணு சிறையிலிருந்து வரும்வரை எந்த விதமான முடிவும் எடுக்கக் கூடாது என்று பலர் எம். ஜி. ஆரைக் கேட்டுக்கொண்டுள்ளதாகவும், அண்ணு வந்ததும் 'தலைவரி'ன் நடத்தை பற்றி பூர்வாங்க விசாரணை நடாத்திவிடலாம் என்றும் கூறப்பட்டதாம்.

தி. மு. க விலிருந்தே எம். ஜி. ஆர். விலகவிருந்ததாகவும், தலைவர்களின் கோரிக்கைக்குஇணங்கியே, அண்ணு வரும்வரை தமது எண்ணத்தை எம். ஜி. ஆர். ஒத்திவைத்திருப்பதாகவும் செய்திகள் கூறுகின்றன.

### அறிக்கை

எம். ஜி. ஆர். பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கை:-

நான் வகித்து வந்த மேல்சபை உறுப்பினர் பதவி, பொதுக்குழு உறுப்பினர் பதவி முதலியவைகளை இராஜினுமா செய்ததைத் தொடர்ந்து, சில நண்பர்கள் நான் தி. மு. கழகத்திலிருந்தும் வெளியேறி விடுவேன் என்ற கருத்தினை வெளியிட்டு வருவதை, எனது கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

எனது கழக உயிர்த்தோழர்களுக்கும் என்மீது பற்றுக் கொண்டுள்ள அன்பர்கட்கும் உறுதியாக—தெளிவாகத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

நான்கழகத்திலிருந்து விலகுவது [illegible] இல்லை. கழக இலட்சியம் தான் எனது ஒரே இலட்சியம்.

ஆகவே எனது பண்புமிக்க தோழர்கள், வீண் வதந்திகளைப்பற்றிச் சிறிதும் கவலையுருமல் கழக வளர்ச்சிக்கும், வெற்றிக்கும் என்னேடு சேர்ந்து மேலும் பேரார்வத்துடன் உழைக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

அன்பன்,
எம். ஜி. இராமச்சந்திரன்.

---

**முக்கிய கவனிப்பு:**

இத்துடன் காணப்படும் கட்டத்தைப் பூர்த்தி செய்து அனுப்பிவைக்கப்படும் விடைகள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தனித்து அனுப்பப்படும் விடைகள் நிராகரிக்கப் படும்.

ஆசிரியர்,
கலைப் பூஞ்சோலை,
த.பெ. இலக்கம்: 1183
கொழும்பு-12

# நாடகப் போட்டி

## முடிவுத் திகதி 11-5-64

### மேலும் பல விபரங்கள் அடுத்த வாரம்

குறிப்பு: ஒரு உறைக்குள் ஒருவர் எத்தனை விடைகள் வேண்டுமாலுைம் அனுப்பலாம். ஆனுல் போதிய முத்திரைகள் ஒட்ட வேண்டும்.

## நாடகப் போட்டி

1963-ம் ஆண்டில்.................................................
(ஊரின் பெயர்)

நடைபெற்ற தமிழ் நாடகங்களில்

சிறந்த நாடகம்.................................................

சிறந்த நடிகர்.................................................

சிறந்த நடிகை.................................................

சிறந்த நகைச்சுவையாளர்.................................................

சிறந்த கதாசிரியர்.................................................

சிறந்த இயக்குநர் (டைரக்டர்).................................................

சிறந்த தயாரிப்பாளர்.................................................

சிறந்த வெளியீட்டாளர்.................................................

ஒப்பம்:.................................................

முகவரி.................................................

.................................................

.................................................

---

(12) அறிமுகப்படுத்துகிறோம்



## தயாரிப்பாளர் நடிகர்

## வேலணை வீரசிங்கம்

1961-ம் ஆண்டு தமிழ் பிரதேசங்களில் சத்தியாக்கிரகம் நடைபெற்றதை அடுத்து தலைவர்கள் தடுப்புக் காவல் முகாம்களில் வாடியிருந்தனர். அவசர கால பூதத்தின் கெடுபிடியில் சிக்கி மக்கள் அல்லலுற்ற வேளையில், யாழ்ப்பாணத்து வேந்தனுன சங்கிலியன் வெஞ்சினங் கொண்டு வெகுண்டெழுந்து கொண்டிருந்தான். தன் வழித் தோன்றல்களுக்கு நேர்ந்துவரும் வதைப்புகளை எண்ணி ஏங்கிக்கொண்டிருந்தான்.

ஆம், கொழும்பிலே அதேவேளையில் 'சங்கிலியன்' தன்னைத் தயாராக்கிக்கொண்டிருந்தான்.

இன உணர்ச்சி கொப்பளிக்கும் நாடகமான 'சங்கிலியனை' வீர இளைஞர்கள் பலர் சேர்ந்து உருவாக்கிக் கொண்டிருந்தனர். அந்த ஆக்கப்பணியிலே விடுதலை வேட்கையும் இனப் பாசமும் கொண்ட இளைஞர் வீரசிங்கத்தையும் காண முடிந்தது.

வேலணையைப்பிறப்பிடமாகக் கொண்டவர் இரசிகர்களுக்கு 'வேலணை வீரசிங்கமாகத் தான் நன்கு அறிமுகமானவர். இவருக்கு தமிழரசுக் கட்சியுடனும், பகுத்தறிவு இயக்கங்களுடனும் நெருங்கிய ஈடுபாடுண்டு.

கொழும்பிலே வர்த்தகத்துறையில் பணிபுரியும் திரு. வீரசிங்கம் கொழும்பில் கலைச்செல்வி கலா மன்றம், யாழ் கலை அரங்கு ஆகிய இயக்கங்களைத் தோற்றுவிக்கப் பெரிதும் பாடுபட்டுழைத்தவர்.

1961-ல் கொழும்பில் கலைஞர் கருணுநிதியின் 'நச்சுக்கோப்பை' நாடகத்தை சிறப்பாக நடத்தியது கலைச்செல்வி கலாமன்றம். இம்மன்றத்தின் வளர்ச்சிக்குப் பெரிதும் பாடுபட்ட திரு. வீரசிங்கம் 62-ல் சங்கிலியனையும், 63-ல் 'ஒன்றே குலம்' நாடகத்தையும் கொழும்பு இரசிகர்களுக்குத் தந்தார். 'ஒன்றே குலம்' நாடகத்தை யாழ் கலை அரங்கிற்காக முழுப் பொறுப்பும் ஏற்று தயாரித்தளித்துப் புகழீட்டியவர் திரு. வேலணை வீரசிங்கம்.

யாழ்கலை அரங்கின் மூன்ருவது ஆண்டு விழாவை கொழும்பில் முத்தமிழ் விழாவாக ஏற்பாடு செய்தவர் திரு. வீரசிங்கம். 2-6-63-ல் நடைபெற்ற இவ் விழாவில் தமிழ் மணம் பெருக்கெடுத்தது. 'ஆத்ம திருப்தி', 'மணியகாரன்' ஆகிய இரு நாடகங்களும் இவ் விழாவில் இடம் பெற்றன.

அகில இலங்கை வேலணை இளைஞர் கழகம் ஒன்றினை அமைக்க ஆர்வத்துடன் உழைக்கும் திரு. வீரசிங்கம் சிறந்த தயாரிப்பாளர் மட்டுமல்ல ஒரு நடிகருமாவார். நாடகத்துறையில் திரு. எஸ். எஸ். கணேசபிள்ளை, திரு. ஏ. பி. செல்லையா, திரு. எஸ். சண்முகநாதன் ('சானு')முதலியோரே தனக்கு ஊக்கமும் ஆக்கமும் அளித்தவர்கள் என்று திரு. வீரசிங்கம் கூறுகிருர்.

வேலணை வாலிபர் முன்னேற்றச் சங்கத்தின் முத்தமிழ் விழாவில் கலையரசு சொர்ணலிங்கம் நடாத்திய 'சாக்கிரட்டீஸ்' நாடகத்தில்தான் திரு. வீரசிங்கம் முதன் முதலில் சிறு பாத்திரத்தில் தோன்றியுள்ளார்.

தரமான நாடகக்களை கொழும்பில் தயாரித்து, அகில இலங்கையிலும் மேடையேற்றி வெற்றியீட்ட வேண்டுமென்பதே திரு. வீரசிங்கத்தின் பேரவாவாகும்.



அண்ணுமலை பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற சென்னை மாநில தமிழ் இசை நாடகப் போட்டியில் ஒளவைப்பாட்டியாகத் தோன்றி முதலிடம் பெற்ற மட்டக்களப்பு செல்வி சாந்தாவதி தெய்வ நாயகம், இசைக் கல்லூரி அதிபர் எம். எம். தண்டபாணி தேசிகருடனும், சகமாணவிகளுடனும ஒளவை வேடத்தில் காணப்படுகிருர். சங்கீத பூஷணம் சாந்தாவதியின் மெல்லிசைக்கச்சேரிகள் இலங்கையின் பலபாகங்களிலும் பிரசித்தமடைந்து வருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஆத்ம வீரர் விவேகாநந்தர்

— சிந்தனைச் செல்வி, ஏழாலை —

"எழுமின்! விழிமின்! குறிசாரும் வரை நில்லாது செல்மின்!" என்ற இந்த வீரப் பொன்மொழியை உலகுக்கீந்தவர் விவேகாநந்த சுவாமிகள். ஆத்மீக ஈடேற்றத்திற்காகப் பாடுபட்ட பெரியார்களில் இவரும் ஒருவர்.

இவர் வங்காளத்திலே கல்விச் செல்வம் நிறைந்த கணக்கர் குடும்பத்திலே விஸ்வநாததத்தர்-புவனேஸ்வரி தம்பதிகளுக்குப் புத்திரராக அவதரித்தார். இவர் சின்ன வயது முதல் ஈஸ்வர பக்தி நிறைந்து விளங்கினார். இவருடைய பிள்ளைத் திருநாமம் நரேந்திரநாதன். இவர் நல்லொழுக்கமுடையவராக இருக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் இவரது பெற்றோர் இவருக்கு வீட்டிலேயே கல்விக்குரிய ஒழுங்குகளைச் செய்வித்தனர். இவர் இன்சொல்லுக்கு மாத்திரமே கட்டுப்பட்டு வந்தார். இவருக்குக் கானத்தில் அதிகப் பிரியம். பிற்காலத்தில் இவரது குருவாயிருந்த இராம கிருஷ்ண பரமஹம்ஸரைக் கூட இவருடைய கானம் கவர்ந்திருந்தது. வடமொழி, ஆங்கிலம் இரண்டிலும் வல்லவராயிருந்த போதும் இவருக்குத் தாய் மொழிப் பற்று மிக மிக அதிகம். உதாரணமாக இவர் கல்வியின் பொருட்டு கல்கத்தா நகரத்திற் கனுப்பப்பட்டபோது அங்கு ஆசிரியர் முதலில் ஆங்கில பாஷையைக் கற்பிக்கத் தொடங்கியதும் வெகுண்டெழுந்து "ஏன் முதலில் நான் ஆங்கிலத்தில் கற்க வேண்டும்? என் தாய்மொழியில் கற்பதுதான் என் கடமை" என்று கூறி, தான் ஆங்கிலம் கற்க முடியாது என்று தந்தையிடம் கூறி விட்டார். பின் அவருடைய ஆசையைத் திருப்திசெய்தே ஆங்கிலம் கற்பித்தார்கள்.

## பிரமச்சாரி

வண்டிக்காரன் ஒருவனின் குடும்பக் கஷ்டங்களைச் செவிமடுத்ததன் விளைவாக இவர் இன்பங்களை வெறுத்து பிரமச்சாரியாக வாழ்ந்தார். இவருடைய ஒளிக்கண்களுக்குப் பெண்களெல்லாம் அன்னையரே. இவர் தன்னை ஈன்ற அன்னையிடம் நிறைய அன்பு கொண்டிருந்தார். எம்மதமும் சம்மதமே என்ற பேதமற்ற நிலை சின்ன வயது முதலே இவரிடம் காணப்பட்டது. அன்புதான் உயர்ந்ததேயன்றி, ஜாதி உயர்ந்ததன்று: ஆத்ம ஐக்கியத்தை உணர்த்துவதே வேதாந்தத்தின் நோக்கமாயிருக்க, ஆன்மாக்களில் உயர்வு தாழ்வு ஏன்? ஜாதி பேதமேன்? என்ற கொள்கை உள்ளவர்.

## துறவறம்

தீண்டாமையையும் அநீதியையும் ஒழிக்க இவர் திடம் கொண்டார். நிறைந்த செல்வத்திலே இவர் நீந்திக் கொண்டிருந்த போதும் இவருடைய மனம் பற்றுக்களை விலக்கி ஏகாங்கியாய், கிடைத்ததை உண்டு, தரையிற் படுத்துறங்கி யதேச்சையாய்த் திரியும் துறவற நிலையை நாடி அலைந்தது. நூற்றுக்கணக்கான நாமதேயங்களும், ரூபங்களுமுடைய மூர்த்திகளை மனிதன் உபாசித்தாலும் முடிவானது ஏகப்பிரம்மமே என்பதை மக்களுக்கு உணர்த்தப் பெரிதும் பாடுபட்டார்.

## வீர முழக்கம்

ஆன்ம ஈடேற்றத்திற்காகப் பாடுபட்ட இவர் மக்களுக்கு ஈந்த வீர முழக்கங்கள் பலப்பல. "தெளிந்ததில் உண்மையும், கருத்தில் தூய்மையும் வெற்றியளிப்பது திண்ணம். இவ்விரண்டையும் படைக்கலமாகக் கொள்ளும் சிறுபான்மையோரும் எத்துணை வலிமையையும் எதிர்த்து வெற்றியடைவது நிச்சயம்" என்பது இவரது கருத்துக்களில் ஒன்று. சிறுபான்மையினராகி ஆத்மீக பலமொன்றையே கொண்டு போராடிக் கொண்டிருக்கும் தமிழ் மக்களாகிய நாமும் சுவாமி விவேகாநந்தரின் கருத்துக்களை மனதில் கொண்டு உறுதியுடன் போராடுவோமாக!

"எவருக்கும் அஞ்சாமல் நிமிர்ந்து நின்று வேலை செய்யுங்கள். மெய் எப்பொழுதும் வெல்கிறது. பெருங் கருமங்கள் யாவும் பலத்த இடையூறுகளின் வாயிலாகத்தான் கைகூடுகின்றன" என்ற அவரின் வார்த்தைகளில் பரிபூரண நம்பிக்கை கொள்வோமாக.

---

சிறுவர் தொடர்கதை:

# மந்திரக் கண்ணாடி

'சுதந்திரன்'

## (13)

ராமுவும் பாலுவும் அடிபட்டுக்கொண்டிருந்தபோது, பாலுவின் கையிலிருந்த நீல நிற மந்திரக் கண்ணாடி தவறிக் கீழே விழுந்தது. கற்தரையில் விழுந்த மந்திரக்கண்ணாடி உடைந்தது. அதிலிருந்துஒரு பெரியபுகைமண்டலம்கிளம்பியது.

உடைந்த கண்ணாடித் துண்டுகளிலிருந்து கிளம்பிய புகையால் ராமுவும் பாலுவும் மயங்கி விழுந்தார்கள்.

சிறிதுநேரம் சென்றதும் ராமுவும் பாலுவும் கண் விழித்துப் பார்த்தபோது, குகையிலிருந்த உடைந்த கண்ணாடித் துண்டுகளையும், பத்திரப்படுத்தி வைத்த இரண்டு முத்துக்களையும் காணவில்லை.

பாலுவும் ராமுவும் குகை முழுவதும், முத்துகளைத் தேடிப் பார்த்தார்கள். அவற்றைக்காணாததால், மந்திரக் கண்ணாடித் துண்டுகளும், இரண்டுமுத்துக்களும் மாயமாக மறைந்துவிட்டன என்று நினைத்தார்கள்.

சரி! இனி என்னசெய்வது, என்று மன வருத்தப்பட்டுக் கொண்டே இவர்களிருவரும் சுருங்கை வாசலுக்கு வந்தார்கள்.

சுரங்கப் படியொன்றில், இவர்கள் பத்திரப்படுத்தி வைத்த முத்துக்களிரண்டும் இருந்தன ராமுவும் பாலுவும் ஆளுக்கொவ்வொருமுத்தாக எடுத்துக்கொண்டு, சுரங்கப் பாதை வழியாக வீட்டை நோக்கி நடந்தார்கள்.

## (14)

★

ராமுவும் பாலுவும் காட்டிற்குள் போவதைப் பார்த்த சில மாணவர்கள், இவ்விஷயத்தை அவர்களின் பெற்றோர்களிடத்தில் தெரிவித்தார்கள். ராமுவையும் பாலுவையும் தேடி, அவர்களின் பெற்றோர்கள் காட்டின் எல்லையில் கவலையுடன் காத்துநின்றார்கள்.

வீட்டாரை நன்றாக ஏமாற்றி விட்டோம், என நினைத்துக்கொண்டு ராமுவும் பாலுவும் சுரங்கப் பாதையைக் கடந்து காட்டின் எல்லைக்கு வந்தார்கள்.

கவலையுடன் நின்ற பெற்றோர்கள், தங்கள் புத்திரர்களைக் கண்டதும் அகமகிழ்ந்து, அன்புடன் வரவேற்றார்கள்.

ராமுவும் பாலுவும் வீட்டிலிருந்து சென்றதுமுதல், நடந்ததெல்லாவற்றையும் கூறினார்கள்.

மந்திரவாதியின் உயிரைக் குடித்த நீல நிற மந்திரக் கண்ணாடி தொலைந்ததே நன்று என்று, சொல்லி மன மகிழ்ந்தார் ராமுவின் தந்தை.

'இனிமேல் எங்கள் உத்தரவில்லாமல், வெளியே ஓரிடத்துக்கும் போகக்கூடாது' என்று பாலுவுக்கும், ராமுவுக்கும் அவர்களின் பெற்றோர்கள் தடையுத்தரவு போட்டனர்.

ராமுவும் பாலுவும், தாங்கள் எடுத்த முத்துக்களைப் பெற்றோர்களிடம் கொடுத்தார்கள்.

விலை மதிப்பற்ற நன் முத்துக்களைப் பார்வையிட்ட, நண்பர்களின் பெற்றோர்கள், அளவுகடந்த ஆச்சரியமுற்று மகிழ்ந்தார்கள்.

(—முற்றும்—)

---

# இடியப்பம்!

—'நவாலியூர்க் கவிராயர்'—

மாவைக் குழைத்து மணிபோல
  மெருகாய்ப் பிழிந்து தட்டினிலே
வேக வைத்து உண்பதற்காய்
  விரைந்து சமைத்த இடியப்பம்!

ஊறிட நீருள் போட்டுவைத்து
  உரலி லிட்டுமா துவைத்து
நீறினை யொத்த அரிசியிலே
  நித்த மவிப்பேன் இடியப்பம்!

மெதுவா யிருக்கு முண்பதற்கு,
  மலிந்த விலைதான் வாங்குங்கோ!
மோதுகின்ற பசி தீர்க்கும்,
  மிருது ஆன நல்லிடியப்பம்!

உப்பு மிட்டு உறுதியுடன்;
  உலராது பதமாய் நீர்விட்டு,
இப்ப அவித்தே னிடியப்பம்,
  இதை வாங்கி உண்ணுங்கோ!

---

# அறிஞர் அறிவுரை

## தன்னம்பிக்கை

தன்னம்பிக்கை இல்லாதவனின் வாழ்க்கை காலால் நடப்பதற்குப் பதிலாகத் தலையால் நடப்பதையொக்கும்.

—எமர்சன்

## தைரியம்

மனிதனை அணி செய்யும் குணங்களில் பிரதானமானது தைரியம்.

—டேனியல் வெப்ஸ்டர்

மரணத்திற்கு அஞ்சாதவர்களே உயிர் வாழத்தகுதியுடையவர்கள்.

—மக் ஆர்தர்

## பயம்

பயமென்னும் கண்களுடன் வருங்காலத்தை நீ பார்க்க வேண்டாம்.

—ஹரிமென்

தொகுத்தவர்:
செல்வி
ஆனந்தி மெய்யழகன்,
[illegible]

---

வளர்மதி — சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக்குட்பட்ட எல்லோரும் அங்கத்தவர்களாகச் சேரலாம். கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் மனுப்பத்திரத்தைப் பூரணப்படுத்தி அனுப்பவேண்டும். மனுப்பத்திரங்கள் தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும். வெவ்வேறு இலக்கங்களைக் கொண்ட மூன்று மனுப் பத்திரங்களை "வளர்மதி"யில் அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து "வளர்மதி" C/o சுதந்திரன், தபால் பெட்டி இலக்கம் 1183, கொழும்பு 12. என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். இப்படிச் செய்வோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு அங்கத்தவர் இலக்கமும் கொடுக்கப்படும். அத்துடன் அத்தாட்சிப் பத்திரமும் வழங்கப்படும்.

---

# வளர்மதி
## சுதந்திரன் மாணவர் மன்றம்
### அங்கத்தவர் மனுப் பத்திரம்

இல. 3

பெயர் ______________________

பாடசாலை ______________________

விலாசம் ______________________

______________________

______________________

பெற்றோர் அல்லது ஆசிரியர் கையொப்பம் ______________________

கையொப்பம் ______________________

---

# சுதந்திரனே வருக!

—(எஸ். எல். பிந்திஹறைஸைமா ஸம்ழூன்)—

வாரமொருமுறை வளமுடன் வருகின்ற
  சுதந்திரனே வருக!
வளமுடன் வந்து 'வளர்மதி' தந்து
  மகிழ்ந்திடவே வருக!
இன்பக் கதைகள் இனிதாய்ச் சொல்ல
  இனிமையுடன் வருக! —வந்து
பலகதை சொல்லி பழமொழி கூற
  பணிவுடனே வருக!
அறிவுச் சுடரை அழகாய் ஏந்தும்
  அறிவுடை வளர்மதியே—நின்
'எங்கள்கிராமம்' 'சின்னவயதில்'
  வளர்ந்திடவே வருக!

புதுமை மிக்கத் தொடர்கதை யொன்று
  கனிவுடனே தருவாய்!—நல்
கவிதைகள் புனைந்து களிப்புறச் செய்ய
  இனிமையுடன் வருவாய்
பலரகச் சேதிகள் பலவும் ஏந்தி
  நல்விருந்தே தருவாய்—எம்
மனம் மகிழ்வுறவே மங்களச்சேதி
  மகிழ்வுடனே தருவாய்
இன்பம் ஊட்டும் இனிமை மிகுந்த
  எழில் மிகு வளர்மதியே—நீ
என்றும் ஓங்கி வளமுடன் வந்திட
  வாழ்த்துகிறேன் வாழி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழகச் செய்திகள்

# நமது உரிமை கிடைக்கும் வரை போராடியே தீருவோம்

## தமிழரசுக் கட்சிக் கிளைக் கூட்டத்தில் இராசதுரை பேச்சு

தன்னலமும்-சுயநலமும் அற்ற தமிழரசுக் கட்சியினர் இருப்பதினுலேதான்-அரசாங்கமோ இதர அரசியல் கட்சியினரோ-தமிழ் மொழிக்கு உரிமை வழங்கவேண்டும் என்ற எண்ணமோ சிறுபான்மையினர் பிரச்சனை தீர்க்கப்பட வேண்டும் என்ற எண்ணமோ கொண்டுள்ளனர். அற்ப சலுகையினுலோ-அமைச்சர் பதவியினுலோ தமிழரசுக் கட்சியினர் திருப்தி அடையமாட்டார்கள். மொழிப்பிரச்சினைக்கு நல்ல முடிவு காணும் வரை-அவர்கள் தமது உரிமைக்குப் போராடியே தீர்வார்கள் என்ற நம்பிக்கையை தமிழ் பேசும் மக்களிடையே மட்டுமல்ல சிங்கள மக்கள் மத்தியிலும் நாம் ஏற்படுத்தி இருக்கிருேம்.

இவ்வாறு 15-3-64ந் தேதி மட்டக்களப்புத் தமிழரசுக் கட்சிக் காரியாலயத்தில் நடந்த மட்டக்களப்பு மாவட்ட தமிழரசுக் கட்சியின் நிருவாக சபைக் கூட்டத்துக்குத் தலைமை தாங்கிப் பேசிய மட்டக்களப்பு மூதற் பாராளுமன்ற உறுப்பினர் திரு. செ. இராசதுரை கூறினர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் பல பாகங்களிலிருந்தும் ஏராளமான தொண்டர்கள் கூட்டத்துக்குச் சமுகமளித்தனர்.



திரு. செ. இராசதுரை

அவர் தொடர்ந்து கூறியதாவது: 'தமிழ் மொழிப் பிரச்சனை சம்பந்தமாக அரசாங்கம் ஒரு பேச்சுவார்த்தைக்கோ அல்லது வட்ட மேசை மகாநாட்டுக்கோ முன் வந்திருக்கிறதென்ருல்-அதற்குத் தமிழரசுக் கட்சியே காரணம் என்பதை நீங்கள் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

இம்முறையும்நாம்ஏமாந்து விடுவோம், ஏமாற்றப்பட்டு விடுவோம் என்று சிலர் கூறுகிருர்கள். பேச்சுவார்த்தைகளில் தமிழ் பேசும் மக்களுக்கோர் கண்ணியமான முடிவு ஏற்படவில்லையாளுல்-மீண்டும் நாம் சட்ட மறுப்பு இயக்கங்கள் ஆரம்பிக்க பின் நிற்கப் போவதில்லை. ஒருவேளை நாம் ஏமாற்றப்பட்டாலும்-தமிழ் பேசும் மக்களை இழிவுபடுத்தும்-எந்தச் சட்டங்களையும் ஏற்றுக் கொண்டு-தமிழினத்தைக் கடைசிவரையும் ஏமாற்ற மாட்டோம்.

தமிழ் பேசும் மக்கள் கட்டுப்பாட்டுடனும்-வைராக்கியத்துடனும் தியாக உள்ளத்தோடும்-வாழ வேண்டிய காலம் இது என்பதை மறக்கமுடியாது'

மூதவை உறுப்பினர் திரு. மு. மாணிக்கம், நகரசபை உறுப்பினர் திரு. ஹா. சவரிமுத்து, ஏருவூர் பட்டண சபை உப தலைவர் ஜனுப் செய்யது முகமது ஆகியோரும் பேசினர்.

பின் வரும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

அடுத்த மாதம் 1-ந் தேதியிலிருந்து, கிராமம் கிராமமாக கட்சிக்கிளைகளைப் புனரமைப்புச் செய்தலின் பின், வைகாசி மாதக் கடைசியிலோ அல்லது ஆனி மாதக் கடைசியிலோ மாவட்டமகாநாட்டை நடத்துவதென்று தீர்மானிக்கப்பட்டது.

### மலைநாடு வள்ளுவர் விழா

இறக்குவானை, அர்ச். அந்தோனியார் கல்லூரியின் தமிழ்ப் பிரிவின், முத்தமிழ் மன்றத்தால் முதன் முறையாக 29—2—64ல் வள்ளுவனுக்குச் சிறப்பாக விழா வெடுக்கப்பட்டது. இவ்விழாவில் முத்தமிழும் இடம் பெற்றன.

முத்தமிழ் மன்றத்தின் ஸ்தாபகரான திரு. பொ. தவநாயகம் ஆசிரியர் அவர்களே மேற்படி விழாவுக்குத் தலைமை தாங்கினுர். அவர் தமது தலைமை உரையில் விழாவின் நோக்கத்தை, விசேடமாக, மலைநாட்டில் வள்ளுவர் விழா ஏன்? என்பதை விளக்கினுர்.

சிறப்புச் சொற்பொழிவாளராகப் பலாங்கோட்டைத் தலைமையாசிரியர் திரு. கே. குருசாமி அவர்கள் கலந்துகொண்டார்கள். மேற்படித் தமிழ்ப் பிரிவு ஆசிரியர் திரு. இ. சின்னத்துரை அவர்கள், 'வள்ளுவனும் குறளும்' என்பதைப் பற்றியும், ஆசிரியை செல்வி ஜே. மனுவேற்பிள்ளை அவர்கள் 'வள்ளுவம்' என்பதைப் பற்றியும் சொற்பொழிவு நிகழ்த்திஞர்கள். மாணவர்கள் செல்வன் சாந்திக்குமாரும், செல்வன் இரத்தினமும் பேசினுர்கள்.

மாணவிகள் செல்வி கத்தரினும், செல்வி மரகதமும், செல்வன் ஆறுமுகமும் 'பொன்-தவம்' அவர்களின் வள்ளுவன் பாடல்கள் பாடினுர்கள்.

இறுதியாகக் குறள் அரங்கேற்றத்தைக் காட்டும் 'குறளின் பெருமை' என்னும் நாடகம், மாணவர்களால் சிறப்பாக நடிக்கப்பட்டு, சிற்றுண்டி வழங்கப்பட்டு, விழா இனிது முடிவுற்றது.

### செல்வநாயகபுரத்தில் இலவச வைத்தியசாலை

உப்புவெளி கிராம முன்னேற்றச் சங்கத்தால் அரசாங்க உதவியுடன் ஒரு இலவச வைத்தியசாலை செல்வநாயகபுரத்தில் திருகோணமலைப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. சு. ம. மாணிக்கராசா அவர்களால் குத்துவிளக்கேற்றிச் சமயாசாரப்படி திறந்து வைக்கப்பட்டது.

திரு. மாணிக்கராசா உப்புவெளி கிராம சபைத் தலைவரின் சேவையைப் பாராட்டிப் பேசினுர். அவர் தமது பேச்சில் 'இப்பகுதியில் உள்ள மக்கள் எல்லோரும் சமாதானமான முறையில் சீவிப்பதைக் காணும்போது அளவிலா மகிழ்ச்சி அடைகிறேன்' எனக் குறிப்பிட்டார்.

மற்றும் திருகோணமலைக் காரியதரிசி திரு. எஸ். சுப்பிரமணியம், உதவி வைத்தியர் திரு. ஜெகதீஸ்வரன், சாம்பலதீவு கிராம சபைத் தலைவர் திரு. வ. நா. தம்பிராசா ஆகியோரும் பேசினுர்கள்.

உப்புவெளி கிராமசபைத் தலைவர் திரு. என். கைலாயநாதன் கூட்டத்திற்குச் சமுகம் கொடுத்த பிரமுகர்களுக்கும், பொது மக்களுக்கும் நன்றியுரை கூறினுர்.

### அர்ச் அந்தோனியார் கழகம்

சுன்ஞகம் அர்ச் அந்தோனியார் கழக 20-வது வருடாந்தப் பொதுக் கூட்டம் சென்ற ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெற்றது. கூட்டத்துக்கு திரு. ஆசீர்வாதம் வென்சஸ்லாஸ் தலைமை வகித்தார்.

தலைவர் கூட்டத்தை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில், இன்று நாட்டின் சுதந்திரத்தை அச்சுறுத்தும் பிரச்னையாக வளர்ந்து வருவது சிறுபான்மை இன மக்களான தமிழ்—முஸ்லிம் மக்கள் மீது அதிகாரதோரணையில் அடக்கு முறையாகச் சிங்களத்தைத் திணிப்பது.

அதே வேளையில் பௌத்த ஜாதிக பலவேகயா போன்ற இயக்கங்கள் நாட்டில் மதத்துவேஷத்தை வளர்த்து சிங்கள கத்தோலிக்கர்களிடையிலும், சிங்கள பௌத்தர்களிடையிலும், ஒரு கலவரத்தை உண்டு பண்ணுமாயின், அது சரித்திரத்தில் நடந்திராத வகையில் 1958-ல் நடைபெற்ற இனக் கலவரத்தைவிட மிக மோசமானதாய் இருக்கும்.

எனவே மனிதத் தன்மையின் பெயரால் மக்கள் மனதில் மதத்துவேஷத்தை ஊட்ட வேண்டாம் எனக் கழகத்தின் சார்பில் கேட்டுக் கொள்ளுகிறேன்.

மேலும் பல இன, சாதி, சமய மக்கள் வாழும் ஒரு சுதந்திர நாட்டில் சிறுபான்மை இனத்தின் மீது அடக்குமுறையைக் கையாளுவது ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் மனித உரிமைகள் சாசன அடிப்படைக் கொள்கைக்கு மாருகவும், அதே சபையின் அங்கத்துவ நாடுகளில் ஒன்ருன இலங்கை அரசாங்கம் தனது நாட்டுச் சிறுபான்மையினரான தமிழ் முஸ்லிம் மக்கள் மீது அதிகார தோரணையில் அடக்குமுறையாகச் சிங்கள மொழியை ஆட்சி மொழியாகத் திணிப்பதை எமது கழகம் மனித உரிமையின் பெயரால் கண்டிக்கின்றது.

எனவே சிங்களமொழியை தமிழ்-முஸ்லிம் மக்கள் மீது திணிக்காமல் அவர்களது மொழியுரிமையை 'ஒவ்வொரு சுதந்திர மக்களுக்குமுள்ள உரிமையாகக் கருதி தமிழ் மொழிக்குள்ள சகல உரிமைகளையும் அளிக்க வேண்டுமெனக் கூறினுர்.

நடப்பு வருட புதுவருட உத்தியோகத்தர்கள் வருமாறு:

தலைவர்: திரு. ஆசீர்வாதம் வென்சஸ்லாஸ், துணைத் தலைவர்: திரு. ம. கிறிஸ்து தாஸ், செயலாளர் திரு. பீ. அமலதாஸ், பொருளாளர்: திரு. செ. சிலுவஸ்ரர்.

ஆட்சிக்குழு உறுப்பினர்கள்: திருவாளர்கள் கே. பாக்கியநாதன், எஸ். அலோசியஸ், எம். சத்தியோகு.

# சிங்களத் திணிப்புக்கு மற்ருெரு முயற்சி

## கிராம சேவையாளரும் சிங்களம் படிக்க வேண்டுமாம்

சிங்களம் படிக்கும்படி வட, கிழக்கு மாகாணங்களிலுள்ள கிராம சேவையாளர்களுக்குக் கட்டளை பிறப்பிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது என்று அறியப்படுகிறது. தமிழ்ப் பிரதேசத்தில் சிங்களத் திணிப்பை நடத்தும் மற்ருெரு முயற்சியே இது என்று தமிழரசு வட்டாரங்களில் சுட்டிக் காட்டப்படுகிறது.

அரசாங்க முடிவின்படி 1966 மே மாதம் முதற் திகதி வரை கிராம சேவையாளருக்குச் சிங்களத்தில் தேர்ச்சி பெற அவகாசம் அளிக்கப்படும்.

உள்துறை அமைச்சர் திரு. ஏ. பி. ஜயசூரியாவின் சிபார்சின் மீதே அரசாங்கம் இத்தீர்மானத்தைச் செய்திருப்பதாகத் தெரிகிறது.

இந்த இரு மாகாணங்களிலும்கிராமசேவையாளர்கள் காரியாதிகாரிகளுடன் நடத்தும் கடிதப் போக்கு வரத்துகளில் பல சிக்கல்கள் ஏற்பட்டிருப்பதாக அமைச்சர் அரசாங்கத்துக்குச் சுட்டிக் காட்டியிருக்கிருராம்.

### பச்சிலைப்பள்ளி வாலிபர் ஐக்கிய முன்னணி

பச்சிலைப்பள்ளி வாலிபர் ஐக்கிய முன்னணியின் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்: போஷகர்: திரு. செ. சேனுதிராசா, தலைமை ஆசிரியர், தலைவர்: பொ. திருஞானம், உப தலைவர்: சி. சிவஞானசுந்தரம், காரியதரிசி: தே. ஆ. மரியதாசன், தனுதிகாரி: சி. சத்தியமூர்த்தி.

நிர்வாகசபை அங்கத்தவர்களாகத் திருவாளர்கள்: ம. குமாரவேலு, மு. செல்வராசா, கு. சின்னையா, தெ. பொன்கலதாசன், வி. செல்லையா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

### உயர்தர மாணவ மன்றம்

செங்குந்த இந்துக்கல்லூரி உயர்தர மாணவ மன்றத் தொடக்கக் கூட்டம் கல்லூரிக் கலா மண்டபத்தில் செல்வன் த. தங்கவேலுவின் தலைமையின் கீழ் சமீபத்தில் நடைபெற்றது.

அவ்வமயம் மன்ற வளர்ச்சியைப் பற்றித் தலைவர் சுருக்கமாகக் கூறினுர். இவ்வாண்டின் புதிய செயற்குழு தெரிவின்போது பின் வருவோர் சபையோரினுல் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: த. தங்கவேல், உப தலைவர்: ந.யோகநாதன், செயலாளர்: ந. கதிரேசன், உப செயலாளர்: க. முத்துலிங்கம், பொருளாளர்: க. சண்முகதாஸ், உப பொருளாளர்: க. சிவராஜா, தமிழ்ப் பத்திராதிபர்: தி. மார்க்கண்டு, ஆங்கிலப் பத்திராதிபர்: சற்குணராஜா.

### தேற்ருத்தீவு கிராம முன்னேற்றச் சங்கம்

'இன்றைய ஈழம் வாழ் தமிழ்பேசும் இனத்தின் விடுதலை அவ்வினத்தின் இளைஞர்களின் கையிற்ருனுண்டு. எனவே தங்களுடைய கடமையைப் பொறுப்புணர்ச்சியுடன் செய்து எதிர்காலச் சுதந்திரச் சமுதாயத்தை ஆக்க வேண்டியது அவசியமும் அவசரமுமாகும். மேலும் நமது சமுதாய வளர்ச்சியை நோக்கி நாம் அரசாங்க உத்தியோகத்தை எதிர்பார்த்திருக்காது கைத்தொழில், கடற்றெழில், வர்த்தகம் ஆகிய முயற்சிகளில் ஈடுபடல் வேண்டும்.'

இவ்வாறு தேற்ருத்தீவு கிராமமுன்னேற்றச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசிய செல்வன் வ. முருகப்பன் குறிப்பிட்டார்.

தேற்ருத்தீவு கிராம முன்னேற்றச் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் திரு. வ. முருகப்பன் தலைமையில் 29-2-64ம் திகதி சனிக்கிழமை மாலை 6 30 மணிக்கு தேற்ருத்தீவு கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்தில் திரு. பெ. ஆறுமுகம் அவர்களின் தேவாரத்துடன் ஆரம்பமாகியது.

தலைவர் முன்னுரையைத் தொடர்ந்து வருடாந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. பின் வருடாந்தவேலைத் திட்டத்தில் சங்கம் கல்வி, சுகாதாரம், பொருளாதாரம் ஆகியவற்றில் ஊக்கம் செலுத்தி கிராம முன்னேற்றத்தில் போதிய ஊக்கம் செலுத்துவதெனவும் தேற்ருத்தீவு அரசினர் பாடசாலைக் கட்டிடத்தை ஒப்பந்தவேலையாகப் பொறுப்பேற்றுச் செய்துமுடிப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது. இறுதியில் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்:

தலைவர்: வ. முருகப்பன், எழுதுவினைஞர்.

செயலாளர்: க. காளிக்குட்டி, ஆசிரியர்.

பொருளாளர்: கா. சுப்பிரமணியம்.

துணைத்தலைவர்: க. அருளம்பலம்.

துணைக் காரியதரிசி: மு. வீரசிங்கம்.

காப்பாளர்: நா. செல்லத்துரை, கிராமசேவையாளர்.


10 பேர் கொண்ட நிருவாகசபை ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பரவசமூட்டும் 7-வது வாரம்!

சென்ட்ரல் (மருதானை) — ராணி (யாழ்ப்பாணம்)

மற்றும் என்டர்டெயின்மன்ட்ஸ் திரைகளில் ஓடிக் கொண்டு இருக்கிறது



சிவாஜி கணேசன், சரோஜாதேவி,
எம். ஆர். ராதா, பாலாஜி, ரங்கராவ்,
பத்மினி பிரியதர்சினி, கருணாநிதி,
முதலியோர் நடித்த
பிரசாத் மூவீஸ் அளிக்கும்

## இருவர் உள்ளம்

கலைஞர் கருணாநிதியின் பேனாவில் பிறந்த பண்பான வசன நடை கொண்ட உயர்ந்த திரை ஓவியம்
'இருவர் உள்ளம்'

★ உள்ளத்தின் படப்பிடிப்பு
★ உணர்ச்சியின் இருப்பிடம்
★ கருத்துக் கருவூலம்
★ கற்பனைக்கு எல்லை

என்றெல்லாம் பார்த்தோர் புகழும் பாங்கான ஓவியம்

மூலக்கதை: டாக்டர் லட்சுமி திரைக் கதை வசனம்: கலைஞர் மு. கருணாநிதி இசையமைப்பு: கே. வி. மகாதேவன் டைரக்ஷன்: பிரசாத்

# இணையில்லா இன்பப் புதுப் படையல்!



கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்) வெம்பிளி (கண்டி) விஜயா (மட்டக்களப்பு)
ஸ்ரீகிருஷ்ணா (திருகோணமலை) மொடேர்ன் (பதுளை) விஜிதா (ஹட்டன்)
கல்யாணி (நாவலப்பிட்டி)

எம். ஜி. ஆர்.-சரோஜாதேவி- எம். ஆர். ராதா
டி. ஆர். ராஜகுமாரி-அசோகன்-நாகேஷ் நடித்த



## பெரிய இடத்துப் பெண்

டைரக்ஷன்: ராமண்ணா இசை: விஸ்வநாதன் - ராமமூர்த்தி
பாடல்கள்: கண்ணதாசன் கதை,வசனம்: சக்தி கிருஷ்ணசாமி

இதுவரை வெளிவராத முற்றும் புதுமை மலிந்த வெற்றிச் சித்திரம்

# 3-வது வெற்றி வாரம்!

செல்லமஹால் (கொட்டாஞ்சேனை) மற்றும் 7 திரைகளில்

எஸ். எஸ். ராஜேந்திரன், முத்துராமன், சகஸ்ரநாமம், தேவிகா, புஷ்பலதா, டி. ஆர். ராமச்சந்திரன், கமலஹாசன், ஷீலாதேவி, டி. ஆர். ராஜகுமாரி தோன்றும்





## வானம்பாடி

# புத்தாண்டு நல்விருந்து!

செல்லமஹால்—கெயிட்டி (கொட்டாஞ்சேனை) மற்றும் திரைகளில்!

★
கல்யாண் குமார்
தேவிகா
சந்திரபாபு
புஷ்பலதா
ராஜ்ஶ்ரீ
★



மொடேர்ன் தியேட்டர்ஸாரின்

## யாருக்கு சொந்தம்?


இப் பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு, பண்டாரநாயக்க வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1964-ம் வருடம் மார்ச் மாதம் 29ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org